கலாபூஷணம். ஏ.இக்பால் அவர்களின்

# ஈழத்துப் பூதந்தேவனார் நான்மணிமாலை

(சிறுபிரபந்த ஆக்கம்)

திருமதி. ஜெ. கந்தவேள் அவர்களின்

# பூண்க நின் தேரே

(இலக்கிய நாடகம்)

செல்வி ஜெ. தவஞானம் எழுதிய

# தமிழும் சங்க இலக்கியங்களும்

(இலக்கிய ஆய்வு)



ஈழத்துப் பூதந்தேவனார்

தமிழ்ப் புலவர் கழகம்

2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம். ஏ.இக்பால் அவர்களின்

## ஈழத்துப் பூதந்தேவனார் நான்மணிமாலை

(சிறுபிரபந்த ஆக்கம்)

திருமதி. ஜெ. கந்தவேள் அவர்களின்

## பூண்க நின் தேரே

(இலக்கிய நாடகம்)

செல்வி ஜெ. தவஞானம் எழுதிய

## தமிழும் சங்க இலக்கியங்களும்

(இலக்கிய ஆய்வு)



ஈழத்துப் பூதந்தேவனார்
தமிழ்ப் புலவர் கழகம்

153. காங்கேசன்துறை வீதி.
கொக்குவில். யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : 05.03.2006

பதிப்பு : ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்

பதிப்புரிமை : ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்
153, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்

பக்கங்கள் : 56

அச்சகம் : ரெக்னோ பிரின்டர்ஸ்,
வெள்ளவத்தை.
077- 7301920

விலை : **ரூபா. 80.00**

# முன்னுரை

தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றியவர்கள் தமிழ்ப் புலவர்கள். இவர்களது முயற்சியினாலேயே தமிழ்மொழி உலகப்புகழ் பெற்று விளங்குகிறது. தமிழ்ப்புலவர் மரபும் இதற்கான கல்வியும் நவீன உலகில் அருகிவருகின்றன. தமிழ்மொழி வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நிலைபெறவேண்டுமானால் தமிழ்ப்புலவர் மரபும் அதற்கான கல்வியும் தொடர்ந்து நிலைபெறவேண்டும். இப்பணிகளைச் செய்தற்காகவே ஈழத்துத் தமிழ்ப்புலவர் கழகம் 2003 ஆம் ஆண்டு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆதீன முதல்வர் முன்னிலையில் உருவாகியது.

இக்கழகத்தின் முதற்பணியாக ஆய்வுக் கட்டுரைத் தேர்வு, இலக்கிய நாடகத் தேர்வு, சிறுபிரபந்த ஆக்கத் தேர்வு ஆகிய தேர்வுகளை அவ் ஆண்டு நடைமுறைப்படுத்தியது. இவை ஒவ்வொன்றிலும் சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தக்க நிதிப் பரிசிலும் கழகச் சான்றிதழும் வழங்க நடுவர் குழு தீர்மானித்தது. இதன்படி தெரிவு செய்யப் பெற்ற ஒவ்வொருவருக்கும் இந்நாட்டின் பெரும் புலவர்களுள் ஒருவராகிய புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை நினைவாக 1000 ரூபா நிதியும் கழகச் சான்றிழும் 2004 நவம்பர் 21 ஆம் நாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த தொல்காப்பிய மகாநாட்டில் வழங்கப்பெற்றன. நிதிப் பரிசிலைப் புலவர்மணியின் மகனும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும் ஆகிய பெ.விஜயரத்தினம் அவர்களும் கழகச் சான்றிதழைப் புலவர் கழகத் தலைர் சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை அவர்களும் வழங்கினர். தெரிவு பெற்ற ஆக்கங்கள் மூன்றும் ஒரு நூலாக வெளியிடப் பெற்றுள்ளன. இவை மூன்றும் இலக்கியச் சுவையும் சொல்நயம் பொருள் நயம் என்பனவும் அமைந்த சிறந்த ஆக்கங்கள். இவற்றை அமைத்து உதவிய மூவரும் போற்றுதற்கு உரியர். இவ் ஆக்கங்களைத் தமிழுலகு பயன்படுத்துக. இவை போன்ற சிறந்த இலக்கிய ஆக்கங்கள் வெளிவருக. இந்நூலை அச்சுப்பதித்து உதவிய கொழும்பு ரெக்னோ அச்சகத்தின் அதிபர் தி.கேசவன் அவர்களுக்கு மிக நன்றி. இப்பணியில் எம்மை ஈடுபடுத்திய இறையருளைப் போற்றுகின்றேன்.

**153, காங்கேசன்துறை வீதி,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்**

**தமிழவேள் இ.க.கந்தசுவாமி**
**கழகச் செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம். ஏ.இக்பால் அவர்களின்

# ஈழத்துப் பூதந்தேவனார்

# நான்மணிமாலை

### வெண்பா

*01.* ஈழத்துப் பூதனாம் தேவனார் ஈந்தளித்த
சூழலும் நிறைந்த அகப்பாடல் - ஏழும்
உலகம் வியக்க ஊன்றிப் படிக்க
வழிதந்த வல்லவனை வாழ்த்து.

### கலித்துறை

*02.* வாழ்த்தியே உன்பெருமை வளர்ந்துலகை யேற்றிப் போற்றி
ஆழ்ந்துமே வுனதறிவு வழிதேர்ந்து விடவில்லை
வீழ்ந்ததா ஈழத் திலக்கியமே என்றெண்ணு மளவே
தாழ்ந்துவிடா துன்வழியே ஊர்ந்தோம் நாமுனதடியே.

### விருத்தம்

*03.* உன்னடியாய்த் தொடரவிவர் முயலவில்லை
உன்னுயர்வு இவர்மதிக்கு நிகரேயில்லை
என்னவெனத் தேடுகிறோம் பெருமிருளே
எமைத்தடுக்கும் இலக்கியம் உனதுடனே
நின்றொழிந்து விட்டதுவா நினைத்தபோது
நின்பெருமை இமாலயத்தின் உயர்வின்மேலாம்
இன்னுமின்னும் காலத்தின் கோலமோட
எழுந்தவைகள் சோதிடமும் வைத்தியமும் தான்.

### அகவல்

*04.* வைத்திய முறைகளை வழி வழி பாவில்
உயர்த்திடும் வித்தைகள் செய்ததை நாமும்
பத்திரப் படுத்திப் பக்குவ மாக்கி
எத்திசை யெல்லாம் எடுத்திட இலக்கியம்
செய்த புகழினைச் செகராச சேகரன்
உய்த சிறப்பைப் பரராச சேகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்த கதைகள் பாரெலாம் தெரியும்
நிகழ்ந்த விளைவு உயர்ந்ததா யில்லை
குருநா கல்லின் கோயிலி லுள்ள
பெருநா யகர்கள் அரங்கிலே ஏற்றித்
திறனாய்ந் ததிலே திக்கு முக்காடி
பெறவுயர் உன்வழி நிகரா யில்லை
பூதந் தேவனார் ஊதிய வழிகள்
ஏதும் செய்ய எத்தனித் தில்லை
ஆதலால் இவர்கள் ஆக்கிட முனையும்
சாதனை எதுவும் மேலெழ வில்லை
ஓதுமிச் சக்தி ஒழிந்ததோ தெரியா
ஓதினர் தலத்தின் புராணம் பலவும்
ஆதிமரபில் அறிந்து காட்டிச்
சேதிகள் மரபு வழியினில் தேர்ந்தன.

### வெண்பா

05. தேர்ந்தவை சங்க அகநூல் வரிசையில்
ஆழ்ந்த கருத்தை அளித்ததாம் - வாழ்ந்தோர்
வழிவழி கூறினர் வாய்மொழி கேட்டோம்
அழிவிலா தென்றுமே ஏறும்.

### கலித்துறை

06. ஏறியிலங்கும் ஈழத்துப் பூதந் தேவனார் புகழே
கூறியறியும் குலமுறையினாற் கவிதை பல
ஊறி யெடுத் திவற்றை யுலகிலே பரப்பிடவே
தேறு மறிவைத் தினமெனக் கீந்திடு வாய்மனமே!

### விருத்தம்

07. மனம் விரியும் உள்ளுணர்வை ஏற்படுத்தி
மாசகற்றி மாண்புணர்த்தும் வழியினிலே
எனைநிதமும் தமிழூற்றுள் மூழ்கிடவே
ஏற்றவழி செய்திடுவாய் அப்போதுதான்
உனைமறவேன் என்தமிழில் இறைவனையே
என்றென்றும் வேண்டி நின்று புகழ்ந்திடுவேன்
தனையுயர்த்தி மதுரையில் வாழ்ந்திருந்த
தகைமை பெறும் பூதந் தேவன் வாழ்க!



### அகவல்

08. வாழும் பெருமை வகையிலாத் தந்தோன்
ஆளும் தமிழின் அறிவெலா முடையோன்
நாளும் உனையே இலக்கியக் கணக்கில்
நீளும் புகழே உடைதாய்க் கூறி
வாழும் எங்கள் இலக்கியக் கணக்கில்
தேறும் சோதிட வைத்தியக் கணக்கை
பாவில் இயற்றிப் பலபேர் அரங்கில்
நாவில் தமிழே ஊறிய தாகப்
போலி வாழ்க்கை வாழ்ந்தும் விட்டோம்
நாளும் பொறுப்பாய் பூதந் தேவா
நாமினித் தமிழை நானில மெங்கும்
பூமிக் குரித்தாய் ஆக்கி மகிழ்வோம்.
உன்னில் உரித்தாம் இலக்கியம் படைத்து
எண்ணும் உயர்வில் எடுத்திடும் புதுமை
இலக்கியம் செய்வோம் எம் தமிழ் உலகில்
இலங்கிடச் செய்வோம் பூதந் தேவா
எமக்கருள் புரிய உமதுடை ஆக்கம்
நமக்குரித் தாக்கி நல்லவை நிகழ
வல்லநற் படைப்பு வாழ்ந்திட
எல்லை யில்லாத இறைவனே அருள்வாய்

### வெண்பா

09. அருளிய தெல்லாம் அறிந்துமே போற்றி
எழுதிய நாவல் சிறுகதை - பழுதிலா
தெல்லாம் விரிந்தே வுயர்ந்திட இன்றுல
கெல்லாம் வியக்கும் பணி.

### கலித்துறை

10. பணிபலதில் ஏற்றதில் பார்புகழும் தமிழாக்கம்
இனிதுடன் நிறைவேறி ஈழத் தமிழ் வரலாறு
பிணிநீக்கிச் சுத்தமெனப் பெற்றிடவே வழிகாட்டும்
அணியினுக்கு ஆளேநம் பூதந் தேவனார் புகழே.

### விருத்தம்

11. புகழுக்குரிய போற்றுகின்ற இலங்கியங்கள்
பிறந்திடவே வழிகாட்டும் புண்ணியனாய்
இகத்தினிலே ஈழத்தில் பிறந்தவனோ
இல்லையோ என்றுபலர் சந்தேகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுத்துடைய பூதந்தேவ னார்வழியில்
தாம் பெரிய இலக்கியங்கள் ஆக்கிக்
செகத்தினையே குலுங்க வைக்கும்
செய்திறனில் முன்னின்றோம் போற்றி.

### அகவல்

12. போற்றும் புகழைப் பெருமையுறக் கொள்வோம்
ஆற்றும் அறிவினுக்கு அரும்பெருமை தந்தோன்
ஈழத்துப் பூதந் தேவனார் ஈந்தபல
ஆழத்தகுந்த அகப்பாடல் ஏழி னிலும்
பெண்பெருமை ஆணுணர்வுபேறுடைத் தாமே
என்றுமவை அழியாத இலக்கிய ஊற்றே
அந்தவழி இலக்கியத்தில் ஊராது முன்னோர்
எந்த வழி சென்றனரோ புரியாத புதிராம்
உந்துகின்ற ஆக்கங்கள் உரைத்ததன் பின்னே
உதிர்ந்ததுவோ மறைந்ததுவோ இருட்தன்மை யாமோ
ஆரியச் சக்கர வர்த்திகளின் முன்னே
ஆன்றபல இலக்கியங்கள் இருந்திடவே வேண்டும்
அநுராத புரக்காலத் தமிழ்வளர்ச்சி பார்க்க
நுணுகாத இடமில்லை கண்டவர்கள் சொல்வீர்
எழுதாது மனப்பாடம் எண்ணியெண்ணி நின்ற
இணைந்தாரோ இலக்கியத்தை அறியவழி இல்லை
புகழ்ந் தேற்றும் படைப்புகள் இருந்திருக்கும்
அகழ்ந் தாழ்ந்து தேடுதலே அறிவுக்குரித்து
இதையாரும் புரியாது போனால்
புதையல் தான் ஈழத்து இலக்கியப் படைப்பு

### வெண்பா

13. படைப்பில் உயர்தவனே பார்போற்றும் இலக்கை
அடைந்திடவே ஆக்கும் திறனே - உடையவனாய்
என்திறமை கூறும் எழில்சேர் இலக்கியங்கள்
உன்னிப் படைத்திடவே ஓர் வாய்.

### கலித்துறை

14. ஓர்ந்து நிதம் ஒப்பில்லா இலக்கியங்கள் தமிழிலே
சார்ந்துமே மரபுவழி தழைத்தோங்க வழி செய்யும்
தேர்ந்த யுயர் ஆக்கங்கள் தெளிவாக ஒளிபெறவே
ஆர்ந்தெழவே அறிவினையே விரிவாக்கித் தருவாய்.



### விருத்தம்

15. தருவதுவும் கேட்பதுமே தனிவழிதான்
தான் தோன்றித் தனமாகப் பெறும் வழிதான்
உருவாகும் படைப்புக்கள் உயர்வாகவே
உலகத்தோர் ஏற்றுவர் இயல்பாகவே
கருவாகக் கனதியாய் நிலையாகவே
கலையுல கெங்கிலும் சிறப்போதவே
செறிவாக்கி நோபல் பரிசொன்றையே
செகத்தினில் தமிழ்பெற வழிசெய்வோமே.

### அகவல்

16. வழியும் சிறக்கும் வல்லமையும் மேலோங்கும்
பொழியும் இலக்கியமே போற்றும் நிலையாகும்
அறிவில் சிறந்துயர ஆக்கங்கள் விரிந்து
நெறியில் புகழோங்கும் நீள்வாழும் படைப்புகளால்
உலகம் புகழும் உயர்வுள் நாமாவோம்
பலமும் பண்பும் படைப்பினிலே சிறக்கும்
உலகே கைநீட்டி உயர்ந்த இலக்கியங்கள்
நலமெனவே பெறுவர் நமதுயர்வு கேட்பானேன்
குறைபோக்கி இவ்வழி குணம் சிறக்கச் செய்த
நறையுயர் நாயகன் ஈழத்துப் பூதந்தேவா
எமக்கு வழிகாட்டி உயர்வுடை உம்படைப்பு
அமைதி யடைந்தோம் அன்புடன் வாழ்க
கன்னித் தமிழைக் கனதிப் படைப்புகளால்
உன்னி உயர்த்திய முன்னோன் முதல்வன்
ஈழத்துப் பூதந் தேவனா ருமையே
வேழத்தில் ஏற்றி விண்ணகத்திற் குயர்த்தி
ஆழமுடை அகப்படைப்பு அத்தனை காட்டி
நாளும் விழாவெடுத்து நயந்து சிறக்கும்
அந்த வழிக்கே ஆக்கி
உந்தும் உயர்வே மொழி சிறக்கவழி

### வெண்பா

17. வழிகாட்டும் ஊக்கமுடை உண்மை இலக்கியங்கள்
வளமாகத் தந்தவனைப் போற்றி - உளமார்ந்த
நன்றி நவிலுதற்கு நானிலத்தில் இன்றெழுந்து
வென்றுவிட்டோம் என்றுமே சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலித்துறை

18. சொல்வதற் கரிய செப்பமுடைச் சங்கமதில் சார்ந்த
வல்லனாம் எங்கள் பெரும் வரலாற்று நாயகனை
உள்ளம் உருகி உயர்ந்த தமிழ்ப் புவலர்கழகம்
தெள்ளு தமிழிலே பிரபந்த ஆக்கப் போட்டி செய்தார்.

### விருத்தம்

19. செய்தயிப் போட்டியினால் செகம்போற்றும்
செய்கைக்கு ஆளான அக்கழகம்
மெய்யாக இலக்கிய வரலாற்றினில்
மேன்மையுடைய இடத்தினையே பெற்றதின்று
ஐயமற மரபுநெறி தொடர்ந்ததாலே
ஆற்றுகின்ற பணியென்றும் உயர்ந்ததாமே
செய்யுமிவர் காரியங்கள் செகமேபோற்றும்
செய்கைக்கு இன்றுயர்வு பெற்றதாமே.

### அகவல்

20. பெற்ற பெரும்பேறு பேணுதற் குரித்து
நற்றமிழ் வாழவே நலம் சேர்க்கும்
இப்பணிக்கு வித்திட்டு என்றும் உயர்வுடையார்
தப்பாது இப்பணியைத் தரணியே போற்றிவிடும்
என்ற கருத்துக்கு இயைவாக இப்பொழுது
நன்றாம் இலக்கியங்கள் நாட்டில் எழுவதினை
பார்த்துப் பரவசம் அடைந்து இன்றெமையே
சேர்த்து இலக்கியங்கள் செம்மை வழியினிலே
வந்ததற்கே காரணம் சங்க இலக்கியத்தின்
உந்துதல் என்பதையே உணர்ந்ததி னாலின்று
ஈழத்துப் பூதந்தே வனார்தந்த அகப்பாடல்
ஆழத்தில் தோய்ந் தெடுக்கும் இப்போட்டி
சாலச் சிறந்த சாதனை என்பதனை
காலமே சாற்றும் கடிதில் நம்கற்பனைகள்
ஆழமாய் உருவாகி அறிவு பெருகுதற்குப்
பாலமாய்க் கொக்குவில் புலவர் கழகமின்று
நாளும் உழைத்த நற்பயன் எதிர்பார்த்து
வாழும் இலக்கியம் வல்லமை பெறுமாமே
ஆகவே நாங்கள் அளவிலா
ஊகங்க ளாலுயர்ந்து உன்னுதல் வேண்டும்!



### வெண்பா

21. வேண்டுகின்ற வல்லமைகள் வித்துவச் சிந்தனைகள்
ஊன்றி எழுதற்குக் காலூன்றல் - சான்றெனவே
ஆக்குதற்காய் அற்புதமாம் ஆழ்ந்த இலக்கியங்கள்
ஊக்கமுடன் ஊன்றிடவே கூறு.

### கலித்துறை

22. கூறுவேன் உரிய குணங்களில் மனிதன் பிறழ்ந்து
நாறுகின்ற காரியங்கள் நாடிவந்தே கூடி விட்டால்
பேறுகளோ பெருமைதராப் பிளவுக ளுள்ளாகும்
ஊறியிதை உடனறிந்து உயர்த்துதல் பயனாம்.

### விருத்தம்

23. பயன்கள் கொடுக்கும் காரியங்கள்
பலமும் நிறைவும் கொண்டதுவாம்
தயவாய் அவற்றை எமக்களிக்கத்
தக்க வழியைக் கணக்கிடுவோம்
உயர்வாம் படைப்பு இலக்கியங்கள்
உளத்தை விரித்து மனிதனுக்கு
நயமாம் நலங்கள் ஆக்குமொரு
நாட்டம் எழுதல் அவசியமே!

### அகவல்

24. அவசிய மென்பது ஆளணித் தேவை
எவரிதை அறிவரோ அதன்முறை செய்வர்
நமது தேவையோ நாட்டினை உயர்த்தல்
அமைதியோ அதற்கு அதிகம் தேவை
கல்வியும் இலக்கிய ஊடக மிதற்கும்
பல்வகை வழியினில் பயன்தரு முண்மை
எண்ணித் துணிந்திட ஈழத்துப் பூதன்
பண்ணிய பாடல்கள் பயன்படு மெனிலோ
தேர்ந்து மவற்றைத் தெளிவுட னறிந்து
சேர்ந்து நம்மிடைப் பரப்புதல் வேண்டும்
அதற்காய்ப் புலவர் கழக மிருப்பது
எதற்கும் பயன்படும் என்பதி னாலே
இலக்கியம் வளர்ப்போர் தமிழ்நெறி சார்ந்தோ
நலக்குணத் துடனே நல்லவை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி கொள்ளல் உடனடித் தேவை
அறிவுட னிதனை ஆற்றுதற் குரிய
இலக்கியத் தேவையை எங்கும் காட்டி
நலன்தரும் படைப்புகள் படைத்திட வாரீர்
அகத்தெளி வுடனே ஆற்றும்
இகத்துக்குரிய இனியவை தருவீர்.

## வெண்பா

25. தருவதிலே நாட்டமுள்ள தன்னல மற்றோர்
பெருமையினை இங்கே புகழ்ந்து - வறுமையினை
ஓட்டும் வழியினுக்கு ஒப்புடைய காரியங்கள்
நாட்டிவிட வாரீர் நயந்து.

## கலித்துறை

26. நயந்தே யுயர்த்திடவே நற்றமிழில் ஏடுகளைப்
பயந்த சீவைத் தாமோதரம் பிள்ளை எனுமுயர்ந்த
நயமுடையோன் பதிப்பித்த நற்சங்க நூல்களையும்
உயர்ந்தெடுத்த வடபுலத்தின் தமிழ்ப் பணி வாழ்க.

## விருத்தம்

27. வாழ்வை உணர்த்தும் இலக்கியங்கள்
வளமாய் ஆக்கும் நல்லவர்கள்
ஈழ மெங்கும் பரந்திடவே
உரங்கள் தந்த வடபுலத்தில்
நீளும் நாவலர் ஆறுமுகம்
நிகழ்த்தும் வசன நடைமுதல்வோன்
ஆளும் தமிழுக் குரித்துடையோர்
ஆன்ற சான்றோர் வழிநடப்போம்!

## அகவல்

28. வழிநடந்து வளமாகி வல்லமை பலபெற்று
அழிவகற்றி அத்தனைக்கும் அறிவு பெற்று
நெடுவழி நடந்து நேர்மை புரிந்து
எடுபடும் தரத்தில் தமிழினை ஏற்றினோம்
ஆதலால் அனைவர் ஆதர வுடையோர்
போதுமா இல்லையா பொதுவாய் அளப்போம்
நாமினி மொழியால் நாடிய காரியம்
சேமிப்புடனே பெற்றதும் தெரிந்த தாமே



ஆகிடும் காரியம் அளந்ததன் உயர்வு
ஏகியே உலகில் ஏறியே சமமாய்க்
காணுவோம் கலைகளில் கண்குளிர் வாழ்வு
பேணுவோம் இலக்கியப் பெற்றியால் உயர்ந்து
செந்தமிழ் வளர்த்த செம்மலர் வரிசையில்
நம்தமிழ் உயர்ந்து நல்லவை செய்யும்
தமிழில் எழுந்த தகையுடைய இலக்கியம்
அமிழ்த மாயாகி அறிஞர் பலரும்
தேசிய ரீதியில் சிறப்புடன் பெற்றுப்
பேசிய பகுதிகள் பல்கலைக் கழகங்கள்
ஓதி யுயர்த்திய செய்கை
ஆதி முதலே அறிந்து படித்தோம்.

## வெண்பா

29. படித்த வரலாறு ஏட்டிலே ஏற்றி
அடுத்த பரம்பரைக் கூட்டுதல் - அடுக்காம்
இதனை மனமேற்று இன்றுடனே செய்து
புதுமை வழிக்குடனே வா.

## கலித்துறை

30. வாவெனவே கூப்பிடுவாய் வாசலிலே பாய் விரிப்பாய்
நாவழுத்தும் தமிழ்ப் பாவை நயமாக ஓதிடுவாய்
பாவழுத்தும் செயற் பாட்டைப் பண்புடன் நடத்திடவே
ஆவன செய்துடனே அருள் புரிவாய் மெய்ப்பொருளே.

## விருத்தம்

1. மெய்ப்பொருளை வேண்டுகின்ற மனிதயினம்
மேலான தத்துவங்கள் தருவதுண்மை
செய்ப்பொருளை எழுகின்ற இலக்கியங்கள்
செயற்பாடு மனிதனுக்கு ஏற்றதுவாய்
உய்ப்பதுவே சிறப்புடைய கொள்கையெனும்
உந்துதலை ஏற்படுத்தும் அவசியந்தான்
துய்ப்பதிலே இலக்கிய ஆர்வம்கொள்ளும்
துறையினுக்குத் தமிழினையே திருப்பிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகவல்

32. திருப்பி விடுதலையே திருப்தி யாக்கி
விருப்புடன் தமிழே நீடு வாழ்தல்
வேண்டும் இச்சிந்தனை மிகைத்து உயர்ந்து
ஆண்டாண்டு தமிழில் அற்புதம் நிகழ்த்தி
உலகெலாம் உலவி உறுபொருள் கொடுத்து
நிலவிட வழியே நிகழ்த்திடக் கல்வி
உயர்வினர் வருகை உடன்நலம் தருக
அயர்விலாப் பணியை ஆக்குவோம் நிசமே
வாழும் இலக்கியம் வல்லமை பெற்றும்
நாளும் உயர்ந்திட நம்பணி முக்கியம்
ஊரும் உலகும் ஒற்றுமைப் பட்டு
தேரும் நலன்களில் செயற்படும் போது
நமது திட்டம் நலன்பெறும் உண்மை
சமதாய் உயர்ந்து எம்மிடை புனையும்
இலக்கியம் தமிழில் உயர்வதே உண்மை
கலக்கிடும் அளவில் காட்டுதல் வேண்டும்
அந்த அளவு முந்துதல் செய்யும்
பந்தம் எம்மை இணைத்ததும் உண்மை
அறிவினி லுயர்ந்த அற்புதம்
செறிந்து செகத்தில் இலக்கியம் செய்வோம்!

### வெண்பா

33. செய்யும் பணியில் சிறந்தோங்க - நம்மவர்கள்
அய்யமற அற்புதமாம் ஆக்கங்கள் - உய்யும்
வழியினிலே சென்றுடனே வல்லமைகள் பெற்றுச்
செழுமைபெற செகத்தில் உயர்.

### கலித்துறை

34. உயர்ந்து விட்டேனென்ற உண்மை உளமறிந்ததால் திண்மை
அயர்ந்துவிடா அற்புதங்கள் ஆற்றி விடுமே நன்மை
பயன் பெறுவோம் தமிழுறவில் பற்றுடன் வளமே
உயர்ந்தெமது படைப்புகள் உலகமெழும் உண்மை.

### விருத்தம்

35. உண்மைதான் எங்கள் உயர்வுகளை
உலகமெலாம் காட்டி நின்று
எண்ணுதற்குக் காலான சங்க
இலக்கியத்தின் முன்னோர் ஈழத்துப்



பென்னம் பெரிய பூதந்தேவனார்
பெற்றெமக் களித்தாரே பெருமை
இன்னும் உயர்வதற்கு அடியெடுத்த
இவர்வழியில் வந்தவர்கள் வாழ்வீர்.

### அகவல்

36. வாழும் இலக்கியங்கள் நாளும் உயர்பெறவே
ஆளும் அற்புதங்கள் அமைந் துடனே
செய்யும் தொழிலாகச் செய்யுள் படைக்க
எய்யும்மொழிப்பயனைத் தந்து உயர்வதற்கு
அல்லும் பகலும் ஆக்கிவிட வேண்டும்
வெல்லும் இடமெக்கு மிகைத்து விடவேண்டும்
வேண்டுதல் செய்யுமெமை வீணாக்கா தாக்க
ஆண்டாடு தமிழ் வளர அறிவுவழி காட்டு
யாரும் மிகைத்துவிடா அன்பெனக் கூட்டு
நேரும் பயன்களினால் நித்தியனே உயர்வாய்
எங்கள் இலட்சியம் பொங்கும் வழியினிலே
எங்கும் சிறப்படையும் ஏற்றவைகள் தாரும்
நானிலம் போற்றுமுயர் நல்வினைகள் சேரும்
வானில் உயர்ந்து வல்லமைகள் காணும்
தானம் அமைத்துத் தந்துவிட்டால் உம்மை
ஆனமட்டும் புகழ்ந்து அடியேனாய் ஆவேன்
இவ்வழிக்கு அடியெடுத்த ஈழமக னார்க்கு
எவ்வழியில் புகழ்கொடுக்க ஏற்றதனைத் தாரும்
பொங்கும் தமிழை வளர்க்க
எங்கும் உதவி எமையே காப்பாய்!

### வெண்பா

37. காத்தருளிக் காப்பவனே காப்பாற்று வாயெனவே
ஊத்தைகளை நாமகற்றி ஏற்கவே - மாற்றமிலா
அன்பெனும் ஊற்றை அனுதினமும் தந்திடுவாய்
என்பெருமை என்றும் நிலைக்க.

### கலித்துறை

38. நிலைத்து நிற்கும் நீள்கருமம் நிறைந்த புகழ் தந்து
அலைத்துவிடா தோரிறுக்கம் அன்பினால் தானெய்துமா
கலைத்துவமும் கற்பனையும் ஓரிடத்தை நாடுமாம்.
குலைத்துவிடா திவற்றைக் குவலயந்தான் ஏற்றிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

39\. பெறுதல் பெருமைக் குரியதாய்ப்
பேணும் தன்மைக் கெனையாக்கி
உரிமைப் பேற்றைத் துணையாக்கி
உடலை இரும்பின் பலமாக்கி
அறிவின் துணையால் அன்பெல்லாம்
அனைத்து உலகும் தமிழ் மூலம்
செறிவாய் ஆக்கும் திறன்களையே
செய்து தருவாய் உரியவனே.

### அகவல்

40\. உரியவன் அவனைக் கேட்பதில் உவகை
உரிமை நமக்கவன் பெருமை தருவான்
அருமை யுடையவன் அனைத்துக் காவலன்
வறுமை போக்கும் வல்லவன் வாழ்க
என்றும் அறிவுக் குரியவ னவனே
நன்றாய் வாழ்த்திப் போற்றுதல் செய்வோம்
காணும் எல்லைக் குரியவை யாவும்
காணா மறைந்து நிற்பவை யாவும்
ஓதி யுணரும் அறிவினைத் தந்தோன்
சாதித் துயரும் சர்வமும் உடையோன்
வல்லமை போற்றி வாழ்த்தினைக் காட்டி
எல்லை யில்லாத அறிவியல் ஞானம்
கல்வியில் கண்டு கலங்கரை விளக்காய்
உள்ளமை பரப்பும் வல்லமை தருவாய்
இலக்கியச் செம்மையில் இலங்கிடும் தமிழை
விளங்கிட அறிவு விருத்திகள் செய்வாய்
உடனிவை எங்கள் தேவைகள் என்போம்
நடைமுறைப் படுத்தும் உதவிகள் செய்வாய்
என்பதைக் கேட்டென் இதயம்
உன்வழி நிற்கும் உயர்ந்தே வாழ்க.



# பூண்க நின் தேரே!

## (இலக்கிய நாடகம்)

**நேரம் 1 மணி**

**பாத்திரங்கள்**

**1. தலைவி**
**2. தோழன்**
**3. தோழி 5**
**5. செவிலித்தாய்**

### காட்சி 1

**களம் — அழகிய பூந்தோட்டம்**

**(சங்க கால வாழ்வின் பின்னணியில்)**

(திரைவிலக மேடையிலே செழிப்பு மிக்க சோலை ஒன்று காட்சிப்படுத்தப்படுகிறது. மேடையின் முன்பக்கத்தே பெண்கள் அங்கு மிங்குமாக மகிழ்ச்சியாக ஓடி ஓடி மலர் பறித்துக் கொண்டிருக்கின்றனர்.)

தலைவி: தோழி! எத்தனை எத்தனை மலர்கள்! எல்லாமே கொள்ளை அழகு!

தோழி- 1 : நித்தம் நித்தம் வருகிறோம் பார்க்கிறோம்! இரசிக்கிறோம்.

தோழி:- 2 ஆனாலும் ஆவல் குறையவில்லையே!

தலைவி: உண்மைதான். இந்த மலர்களை எல்லாம் மாண்புறப் படைத்த எங்கள் ஆலமுண்டகடவுள் எவ்வளவு புகழுக்குரியவன்?

தோழி:-1 உண்மைதான்! எத்தனை காலமாக எவ்வளவு மலர்களைப் பார்த்துவிட்டோம்! இவற்றை எல்லாம் படைக்கும் இறைவன் பெரியோனே!

தலைவி:- அவன் பாதம் போற்றுதலே கடன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி:- என்ன! ஆண்டவனில் அன்பு பெருகிக்கொண்டே செல்கிறது?

தலைவி:- என்னைப்படைத்தவன். நான் விரும்பும் மலர்களைப் படைத்தவன் எப்படி அவனை மறக்க முடியும்.

தோழி:- தலை நிறைய எல்லோரும் மலர்களைச்சூடிக்கொண்டோம். இனிக் கோயிலுக்குச் செல்வோம். அவனுக்கும் மலர்களைச் சூட்டி அலங்கரிப்போம்.

தலைவி:- இது ஒன்றும் புதுமையல்லவே! தினந்தினம் நாம் செய்கின்ற செயல் தானே?

தோழி:- 2 சூரியன் உள்ளவரை எம்மனித இனம் செய்யப்போவதும் இதுதானே?

தலைவி :- தத்துவத்தை நிறுத்திவிட்டு வாருங்கள் கோயிலுக்குச் செல்வோம்

(எல்லோரும்கைகளிலே மலர்களைச் சுமந்தபடி அருகே உள்ள மரத்தின் கீழ் இருக்கும் இறைவனை வணங்கி அலங்கரித்து மகிழ்ந்து சோலையின் மறுபக்கத்தே வந்து மணலிலே அமர்தல்)

தோழி:- மலர்களைப்பறிப்பதில் உள்ள ஆர்வம் போன்று மணல் வீடு கட்டுவதிலும் எமக்குப் பிரியம் அதிகம் தான்.

தலைவி:- உன்னுடைய வீடு ஏன் அழகாக வரவில்லை.

தோழி:-1 அதுவா! இப்போது தானே நான் கட்டிப்பழகுகின்றேன். இவ்வளவு காலமும் தாங்கள் தானே கட்டித்தந்தீர்கள்.

தலைவி:- (சிரித்தபடி) கவலைப்படாதே இன்னும் சில நாட்களில் உனது மணல் வீடு மிக மிக அழகாக வந்து விடும்.

தோழி:-1 தங்கள் வீடு எப்போதும் நேர்த்தியாக அழகாக இருக்கிறதே. அதற்கு என்ன காரணமோ?

தலைவி:- என்ன! எனது வீடு அழகாக இருக்கிறதா?

தோழி:-1 தாங்கள் எதைச் செய்தாலும் அழகாகவே அமைந்து விடுகிறது. அது தங்களுக்கு முக்கண் முதல்வன் தந்த வரம் போலும்!

தலைவி :- அதிகம் புகழ வேண்டாம். ஏதோ கட்டினேன். (வீடு கட்டிக் கொண்டிருந்த தலைவி ஏதோ ஓர் சத்தம் வர அங்கே பார்க்கிறாள். அங்கே அந்த இளைஞன் நின்று கொண்டு அவளையே வைத்த கண் வாங்காது பார்த்தபடி நிற்கின்-றான். அவ்வேளை தலைவியின் பார்வை எங்கோ செல்-வதை அறிந்த தோழி)



தோழி:- மணல் வீடு கட்டுவதை நிறுத்தி விட்டு மண் புதர்மேல் தங்கள் பார்வை பதியக்காரணம் என்னவோ?

தலைவி:- (தன்னைச் சுதாகரித்துக்கொண்டு) அது அது....அது.... அங்கே ஏதோ அரவம் கேட்டது அது தான்.

தோழி:- (சிரித்தபடி) அது... முயல்கள் பாய்ந்து பாய்ந்து விளையாடும் அரவம் தான் கேட்கிறது.

தலைவி:- (தனக்குள்ளே) இவன்.... இவன் கூட ஒரு முயல்தான்! தினம் தினம் வருகிறான்; முயல் போலப் பதுங்கியிருந்து என்னையே நோக்குகிறான். அவ்வாறாயின் இவன் ..... ஓ.... அழகன்...

தோழி:- தலைவி முயல்களின் அரவத்திற்குப் பயந்து அமைதியாகி விட்டீர்கள் போலும்?

தலைவி:- இல்லை .... அப்படி .... அப்படி... பயம்..

தோழி: என்றும் இல்லாத மாற்றம் தெரிகிறது தங்களுக்கு என்ன.... என்ன நடந்தது?

தலைவி:- எனக்கு... ஒன்றுமில்லை... தலை... தலையிடிக்கிறது.

தோழி :- இந்தக்கணம் வரை நன்றாய்த்தானே இருந்தீர்கள் திடீரென...

தலைவி:- தலையிடி முன்பே இருந்தது. ஆனால், தற்போது கொஞ்சம் அதிகமாகி இருக்கிறது.

தோழி:- அன்னை ஏசப்போகிறாள். ஏன் வெயிலில் விளையாடினீர்கள் என்று... எனக்குப் பயமாக இருக்கிறது.

தலைவி:- வீணே பயப்படாதே விளையாடியது போதும். வீடு செல்வோம்.

தோழி:- சரி எல்லோரும் புறப்படுங்கள் வீடு செல்வோம்.

(எல்லோரும் எழுந்து செல்லல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 2

**களம் — சோலை**

**காலம் — மாலை நேரம்**

(வழமை போன்று பெண்கள் சோடிசோடியாகச் சேர்ந்து மணல் வீடு கட்டி விளையாடுகின்றனர்)

தலைவி:- சின்னச் சின்ன வீடு

தோழி:- சிறந்த நல்ல வீடு

தலைவி:- வண்ண வண்ண வீடு

தோழி:- வடிவான வீடு

(பாடி விட்டு எல்லோரும் சிரித்து மகிழல்)

தோழி:- எத்தனை நாட்களாகக் கட்டுகிறேன் வீடு! இன்னமும் நேர்த்தியாக வரவில்லையே

தலைவி:- மனதிலே சலிப்பிருந்தால் எவ்வாறு வீடு நேர்த்தியாக வரும்?

தோழி:- என்ன சொல்கிறீர்கள்?

தலைவி:- அங்கும் இங்கும் பார்ப்பது, அரட்டை அடிப்பது பின்னர் வீடு நேர்த்தியில்லை என அழுவது இது தானே உனது வழமை.

தோழி:- ஓகோ! அப்படியா? இப்போது புரிந்து கொண்டேன். தங்கள் அழகான மணல் வீடுகளின் இரகசியங்களை!

தலைவி :- அப்படியாயின் முயன்று பார்க்கலாமே!

தோழி:- இனி நான் யாருடனும் பேசாது இருந்து அழகான வீடு கட்டப்போகிறேன் - பாருங்களேன்.

தலைவி:- எனது வீடு பூர்த்தியடைந்து விட்டது எவ்வளவு....எவ்வளவு கஷ்டப்பட்டு விட்டேன்

(தலைவி தனது வீட்டைப்பார்த்து இரசித்துக் கொண்டிருக்கத் தோழியோ அரைகுறையான வீட்டைக் கட்டிக்குழம்பிக் கொண்டிருந்-தாள். மற்றைய பெண்களும் ஆங்காங்கே இருந்து மணலில் வீடு கட்டிக் கொண்டிருக்கின்றனர். இனியராகம் ஒன்று இசைக்கப்படுகிறது. திடீரென அங்கு வேகமாக வந்த இளைஞன் தலைவியின் வீட்டைக் காலால் எத்தி உடைத்து அப்பாற்செல்லத் தலைவி மிகுந்த கோபத்துடன் அவனைப் பார்த்தல்)

தலைவன்:- தவறுக்கு வருத்துகிறேன் மன்னிக்க வேண்டும். (தொடர்ந்து தலைவி கோபமாகவே நோக்குதல்)



தலைவன்:- தாங்கள் இதை இவ்வாறு பெரிதாக எண்ணுவீர்கள் என நினைக்கவில்லை.

(தலைவியின் கண்ணில் இருந்து நீர்த்துளிகள் விழத் தலைவன் துடித்து)

தலைவன்:- பெண்ணே வீடு... மணல் வீடு ..... உடைந்தது இவ்வளவு துன்பமா? எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது?

தோழி:- உடைத்து விட்டு வேதனைப்பட்டால் திரும்பவும் வீடு கட்டப்பட்டு விடுமா என்ன?

தலைவன்:- பெண்ணே! தங்கள் தோழி சம்மதித்தால் இப்போதே உடைந்த வீட்டைக் கட்டித்தருகிறேன்

தோழி:- உடைந்த வீடு என்று குறிப்பிடாதீர்கள். உடைத்த வீடு என்று குறிப்பிடுங்கள்.

தலைவன்:- திருத்திக் கொள்கிறேன் உடைத்த வீட்டை அழகாகக் கட்டித் தருகிறேன் சம்மதம் தானே!

தோழி:- நீங்கள் கட்டித்தந்தால் தான் இவளது கோபமும், சோகமும் நீங்கும்.

தலைவன்:- அப்படியானால் இதோ இப்பொழுதே கட்டித் தருகிறேன். (என்று கூறி மணல் வீட்டை மிக மிக அழகாகக் கட்டி முடித்தான். அதைக் கண்டு மிகவும் மகிழ்ந்த தலைவி மனதுள்ளே பாராட்டினாள்)

தலைவி:- (தனக்குள்ளே) எவ்வளவு அழகான வீடு! வீடு மட்டுமா அழகு? வீரனும் அல்லவா அழகு?

தலைவன்:- இதோ! வீடு கட்டி முடிந்து விட்டது எப்படி? அழகாக இருக்கிறதா?

தோழி:- மிக மிக அழகாக இருக்கிறது எங்களுள்ளே மிக மிக அழகாக வீடு கட்டுபவள் எமது தலைவிதான் ஆனால்...

தலைவன்:- ஆனால்,?

தோழி:- இன்று அவளது வீட்டையும் அழகால் வென்று விட்டது தங்களது வீடு!

தலைவன்:- பாராட்டுக்கு நன்றிகள்! நீங்கள் பாராட்டினால் மட்டும் போதுமா? தங்கள் தலைவி ஏதும் கூறவில்லையே? (என்று கூறத் தலைவி நாணத்தில் தலை கவிழ்ந்தாள்)

தோழி:- தலைவியின் மௌனமும் புன்சிரிப்பும் தங்களைப் பாராட்டு-கின்றனவே! அவை உங்களுக்குப் புரியவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்:- பாராட்டுக்கு நன்றி! இதை விட அழகான வீடுகள், விதம் விதமான வீடுகள் என்னால் கட்ட முடியும்.

தோழி:- அப்படியா மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. தினமும் வந்து வீடுகள் கட்டித்தருவீர்களா?

தலைவன்:- அதற்கென்ன? வரலாம். ஆனால்...

தோழி:- ஆனால்...

தலைவன்:- நான் வருவது தங்கள் தலைவிக்குப் பிடிக்குமோ என்னவோ?

தோழி:- அவளது முகத்தைப் பாருங்கள் விடைகிடைக்கும்.

தலைவி:- (தனக்குத்தானே) தாங்கள் வருவது எனக்கும் மகிழ்ச்சி தானே. எனது உள்ளத்தை தங்களிடம் பறிகொடுத்து விட்டேன்! மணல் வீட்டைக்கட்டியதோடு என் காதலையும் அல்லவா கட்டி விட்டீர்கள்?

தலைவன்:- பெண்ணே தாங்கள் மௌன்மாக இருப்பதைப் பார்த்தால் நான் இங்கிருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லைப் போலும்?

தலைவி:- (துடிதுடித்தவளாய்) இல்லை... அப்படி.. அப்படி ஒன்றுமில்லை.,

தலைவன்:- (தலைவியின் வார்த்தைகளைக் கேட்ட மகிழ்ச்சியில்) பெண்ணே சென்று வருகிறேன்! நாளை வந்து மிக அழகான வீடு கட்டித்தருகிறேன். தங்கள் கண்களில் இருந்து எத்தனை முத்துக்கள் உதிர்த்தனவோ அத்தனை வீடுகள் கட்டிதருவேன் வருகிறேன் (தலைவன் செல்ல அவனையே பார்த்தபடி தலைவி இருக்க அதைக்கண்ட தோழி)

தோழி:- வருந்தாதீர்கள்! அழகன் நாளையும் வருவான். ஆனந்தமாய் இருக்க வீடும் தருவான்

தலைவலி:- உனக்கு எப்போதும் நகைப்பதுதான் வழக்கம். குருவிகள் கூடுகளை நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டன. அன்னை தேடப்போகிறாள்! புறப்படுங்கள்.

தோழி:- மணல் வீடு கட்டி மகிழ்ந்தது போதும். விரைவாக எழுந்திருங்கள் வீடு செல்வோம். (எனக்கூறி எல்லோரும் எழுந்து வீடு நோக்கிச் செல்லல்)



## காட்சி — 3

**களம் — சோலை**

**காலம் — மாலை நேரம்**

(சோலையிலே தலைவன் உலாவிக்கொண்டிருக்க அவனது தோழன் வருதல்)

தலைவன்: உன்னைக் காண்பதற்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது?

தோழன்:- ஏதோ முக்கியமான விடயம் வைத்திருக்கின்றாய் போலும்!

தலைவன்:- முக்கியமான விடயம்தான்! என் வாழ்க்கையே அவள்தான்!

தோழன்:- என்ன? வாழ்க்கை...அவள்... புரியவில்லையோ!

தலைவன்:- ஒரு பெண்ணைப் பார்த்தேன்! அவளிடம் என்னை இழந்தேன்! தினம் தினம் பார்க்கிறேன் நேற்று..

தோழன் :- நேற்று...

தலைவன்:- அவள் கட்டிய மணல் வீட்டை உடைத்து விட்டேன்.

தோழன்:- (பரிதாபமாக) ஏன் இப்படி ஒரு காரியத்தை இரக்கமின்றிச் செய்தாய்? நீதான் இரக்கத்தின் சிகரமாயிற்றே?

தலைவன்:- அவளுடன் கதைப்பதற்கு எனக்கு வேறு வழி தெரியவில்லை.

தோழன்:- ஓகோ அப்படியா? அதன் பிறகு என்ன நடந்தது?

தலைவன்:- வீட்டை உடைத்ததும் கோபம் கொண்டாள்; வெறுப்போடு நோக்கினாள். பின் நானே அழகிய வீடொன்றைக் கட்டிக் கொடுத்தபோது புன்சிரிப்பை உதிர்த்தாள். என் உள்ளத்தையும் பறித்தாள்.

தோழன்:- கதை நன்றாக இருக்கிறது. மேலே கூறு...

தலைவன்:- எனது துன்பம் உனக்கு எப்படிப் புரியும்? நான் அவளைக் காண அவளது வீட்டுக்கே செல்ல நினைக்கிறேன்.

தோழன்:- துணிச்சலுக்கு எனது பாராட்டுக்கள்.

தலைவன்:- நீதான் எனக்கு உதவி புரிய வேண்டும் அவள் இருக்கும் இடம்பற்றிய தகவல்களைச் சேகரித்து வரவேண்டும்

தோழன்:- உனக்கு இது கூடச் செய்யவில்லை ஆயின் நட்புக்குப் பொருள்தான்என்ன? நீ கவலையை விடு! நாளை எல்லாத் தகவல்களையும் பெற்றுக் கொண்டு வருகிறேன்.

தலைவன்:- நன்றி! உனக்கு மிக்க நன்றி! சென்றுவா?

(நண்பர்கள் இருவரும் பிரிந்து செல்கின்றனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 4

**களம் — தலைவியின் வீடு.**

(தலைவி தாயுடன் இருந்து உரையாடிக்கொண்டு இருக்கிறாள்! வாசலில் இளைஞன் ஒருவன் வருகிறான். தலைவியும் தாயும் கண்டு கொள்கின்றனர்.)

தாய்:- அங்கே யாரது?

தலைவன்:- மன்னிக்க வேண்டும்! தாகமாக இருக்கிறது சிறிது நீர் கிடைக்குமா?

தாய் :- பெண்ணே! அவனுக்குக் குடிப்பதற்கு நீர் வேண்டுமாம் அந்தப் பொற்குவளையில் நீர் எடுத்துக்கொடு!

(தலைவி நீர் எடுத்துவந்து கொடுக்க அவன் அவளது கரங்களைப் பிடித்து இழுக்கிறான்! அவ்வேளை அவள் அலறுகிறாள்).

தலைவி:- அன்னாய்! இவன் செய்வது அறியாயோ?

தாய் :- என் கண்ணே! உனக்கு என்ன நடந்தது? (என்றபடி அருகே வரத் தலைவனைக் காட்டிக் கொடுக்க விரும்பாத தலைவி)

தலைவி :- ஒன்று.... ஒன்றுமில்லை... இவன் விக்கினான். நான் ... அஞ்சினேன்.

தாய்:- மகனே! ஒன்றுமில்லை (எனக்கூறி முதுகில் தலைவனுக்குத் தடவி விட அவன் கடைக் கண்களால் தலைவியை நோக்கினான் தலைவியும் புன்னகை செய்தாள்)

தாய் :- மகனே! எப்படி உள்ளது?

தலைவன்:- அன்னையே என் தாகம் தீர்ந்தது மிக்க நன்றி இதோ உங்கள் பொற்குவளை! (அதனை வாங்கிக் கொண்ட தாய்)

தாய் :- மகனே! தாங்கள்....

தலைவன்:- அருகில் உள்ள ஊரில் தான் இருக்கின்றேன் நன்றி! அன்னையே வருகிறேன் (என்று கூறித்தலைவியைப் பார்த்தபடி செல்லத் தலைவி நாணியபடி நிற்கிறாள்)



## காட்சி — 5

**களம் — சோலை**

(தலைவன் அருகே தலைவி இருக்கிறாள்)

தலைவன்:- பெண்ணே! உன்னைக் காணாத நாள் எல்லாம் வீணான நாளே!

தலைவி:- என்னைத்தாங்கள் தினமும் பார்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது?

தலைவன்:- சரி தான்! எங்கே அந்த வழியைக் கூறு பார்க்கலாம்?

தலைவி:- மணம் புரிந்து கொள்வது தான்!

தலைவன்:- எனக்கு மட்டும் மணம் புரிவது விருப்பமில்லையா என்ன?

தலைவி:- எத்தனை நாட்கள் தான் இவ்வாறு திருட்டுத்தனமாகச் சந்திப்பது களவு வாழ்க்கை போதும்

தலைவன்:- பொருளில்லாமல் வாழ முடியாதே!

தலைவி:- அப்படியானால்...?

தலைவன்:- நாளையே நான் பொருள் தேடச் செல்லப் போகிறேன். வாகை மலர்கள் மண்ணில் சிந்தும் காலத்தில் உன்னிடம் வருவேன் மணமும் புரிவேன்.

தலைவன்:- அது வரையில்.....?

தலைவி:- அதுவரையில......?

தலைவன்:- நாமும் சற்று பிரிந்திருக்கத்தான் வேண்டும்.

தலைவி:- உங்களைப் பிரிந்து ஒருகணமும்....

தலைவன்:- எனக்கு மட்டும் உன்னைப் பிரிவது கஷ்டமில்லையா தடைகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. தடைகளைத் தகர்த்து வெற்றி கொள்வதே வாழ்க்கைத் திறனாகும்.

தலைவி:- கட்டாயம் செல்லத்தான் வேண்டுமா?

தலைவன்:- நமது நல்வாழ்வுக்காகச் செல்லத்தான் வேண்டும்.

தலைவி:- உங்களுக்காகக் காத்திருப்பேன்

தலைவன்:- பெண்ணே! கலங்காதே நான் மிக விரைவாக வந்து உன்னை வதுவை செய்து கொள்வேன்.

தலைவி:- சென்று வாருங்கள் அன்னையும் என்னைத் தேடிவரப் போகிறாள்!

தலைவன்:- பெண்ணே! என்கண்ணே! சென்று வருகிறேன். (எனக் கூறி விடை பெற்றுச் செல்லத் தலைவி தூரத்தே காவல் நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழியுடன் இணைந்து உரையாடியபடியே வீடு நோக்கிச் செல்கின்றனர்)

## காட்சி — 6

**இடம் — பூஞ்சோலை.**

(தலைவியும் தோழியும் மலர் கொய்து கொண்டிருக்கின்றனர்)

தோழி:- (திகைத்தவளாக) தாங்கள்...என்ன கூறுகிறீர்கள்?

தலைவி:- பெற்றெடுத்தவர் விருப்பிற்கே மணம் புரிந்திருக்க வேண்டும். நான் தவறு செய்து விட்டேன்.

தோழி:- வீணாக எதற்கு வருந்துகிறீர்கள்.

தலைவி:- ஒன்றும் புரியாதவள் போலப் புதிர் போடுகிறாய்! தலைவன் வாகை மரம் மலர்களைச் சிந்தும் போது வருவேன் என்று கூறிச் சென்றது மறந்து விட்டதா?

தோழி:- அது....அது....இல்லை.

தலைவி:- அதோ அந்த வாகை மரத்தைப்பார்! எல்லா மலர்களையும் உதிர்த்துவிட்டு ஊமையாக நிற்கிறது.

தோழி:- இது பருவகாலம் செய்த கோலம்!

தலைவி:- தலைவன் தந்த துன்பத்தால் கொம்பிழந்த கொடியாய் நானும் வாடி வதங்கி விட்டேன்! என்னைக் காண்போர் பலகதை பேசுகிறார்கள்! அன்னையோ எனக்கு நோயெனப் பூசாரியிடம் அழைத்துச் செல்லப்போகிறாளாம்

தோழி:- துன்பப்படாதீர்கள் எல்லாம் நன்றாகவே நடக்கும்.

தலைவி:- இன்னமும் நீ நம்புகிறாயா? பேதைப்பெண்ணே! அவர் குறித்துச்சென்ற காலம் முடிந்து விட்டது. அவர் மறந்து விட்டார். உலகிலே என்னை விட அழகிய மகளிர் எத்தனை பேர் உளர்?

தோழி:- தலைவி மனதைத் தளர விடாதீர்கள் - எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

தலைவி:- அவர் தந்த வாக்குறுதிகளை நம்பி என் வாழ்க்கையை இழந்து விட்டேன்.

தோழி:- அவசரப்படவேண்டாம்! சற்றுப்பொறுங்கள்

தலைவி:- இனி, உயிரை விடுவதைத்தவிர வேறு வழி இல்லை

தோழி:- இப்போதுதான் பொறுமை வேண்டும் நான் தங்கள் தலைவனை எப்படியாவது கண்டுபிடித்துத் தங்களிடம் அழைத்து வருவேன். உங்கள் மீது ஆணை! என்னை நம்புங்கள்.



தலைவி:- நீ....

தோழி:- நாளையே நான் செல்கிறேன்! வெற்றியுடன் வருவேன்.

தலைவி:- உன்னைத்தோழியாகப் பெறநான் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

தோழி:- கலங்காதீர்கள்! வாருங்கள் நேரமாகி விட்டது வீடு செல்வோம். (இருவரும் உரையாடியபடி செல்லல்)

## காட்சி 7

**இடம் — கடற்கரை.**

(தலைவன் தனியே கடற்கரையில் உலாவிக்கொண்டு இருக்கிறான். அவனைக் கண்ட தோழி மகிழ்ச்சியுடன் அவன் அருகே வருதல்.

தோழி:- கடற்துறைக்கு உரிமையுடையவனே! வணக்கம்

தலைவன்:- (ஆச்சரியத்துடன்) ஆ....ஆ.... நீயா... இங்கு ....ஏன் வந்தாய்?

தோழி:- மாலை நேரத்தில் கடற்கரைக்கு வந்து இன்பமாக இருக்கிறீர்கள் போலும்.

தலைவன்:- ஆம்! ....நீ...சொல்வது...

தோழி:- அனலிடைமெழுகாகி உருகிக் கொண்டிருக்கும் தலைவியின் நலம் கூறவந்தேன்.

தலைவன்:- நீ...தலைவி...

தோழி:- அறிவும் பண்பும் கொண்டவனே! உனக்கு அறிவு, பண்பு, முறை, நிறை, ஒழுகுதல் முதலான சொற்களின் பொருள் தெரியுமா?

தலைவன்:- என்ன? சொற்களின் பொருளா? என்ன கற்பிக்க வந்துள்ளாயா?

தோழி:- உண்மையாகத்தான் கேட்கிறேன்.

தலைவன்:- நீ அறிவில் சிறந்தவள் தானே. எங்கே கூறு பார்க்கலாம்.

தோழி:- கேளுங்கள்.

தலைவன்:- ஆற்றுதல் என்பதன் பொருள் என்னவோ?

தோழி:- இவ்வாழ்க்கை நடத்துதல். வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவி புரிதலாகும்.

தலைவன்:- போற்றுதல் என்றால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி:- ஒன்றைப் பாதுகாத்தலாகும். அதாவது தன்னைக் கூடியவரை எக்காரணம் கொண்டும் பிரியாமல் இருத்தலாகும்.

தலைவன்:- நல்லது? பண்பு என்பது பற்றி யாது கூறுவாய்?

தோழி:- பண்பு என்பது உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதலாகும்.

தலைவன்:- நன்று நன்று! அன்பு என்றால் என்ன பொருளோ?

தோழி:- பாவம்! நீ அதனையும் அறியாய் போலும். அன்பு எனப்படுவது தனது உறவினர் நிலை கெடாதவாறு பார்த்துக் கொள்ளும்தன்மையேயாகும்.

தலைவன்:- மதிநிறைந்த பெண்ணே! அப்படியாயின் அறிவு என்பதன் பொருள் யாதோ?

தோழி:- அறியாதவர்கள் தன்னைப்பார்த்துச் சொல்லும் சொல்லைப் பொறுத்துக் கொள்வதே அறிவு எனப்படும்.

தலைவன்:- நல்ல புத்திசாலியாக இருக்கிறாய்! "செறிவு" என்ற சொல்லின் அர்த்தத்தைக் கூறமுடியுமா?

தோழி:- செறிவு எனப்படுவது ஒருவன் தான் கூறிய வார்த்தைகளிலிருந்து வழுவாது இருத்தலாகும்.

தலைவன்:- ஓகோ! அப்படியா? நிறை எனப்படுவது யாதோ?

தோழி:- மறைவாகக் கொள்ள வேண்டிய ஒன்றைப் பிறர் அறியாதவாறு கொண்டு ஒழுகும் தன்மையாகும்.

தலைவன்:- அவ்வாறாயின் "முறை" என்பதன் பொருளையும் கூறுக

தோழி:- முறை எனப்படுவது உறவினர் என்று கண்ணோடாது அவர் செய்த குற்றத்திற்கு ஏற்ப அவரவர் உயிரையே வாங்க வேண்டிய நிலைவரினும் அவ்வாறே செய்வதாகும்.

தலைவன்:- இறுதியாக ஒன்று! பொறை என்பது என்ன?

தோழி:- தகுந்த காலம் வரும் வரையில் பகைவரைப் பொறுத்துக் கொள்ளலாகும்.

தலைவன்:- உனது அறிவே அறிவு! பாராட்டுகிறேன்.

தோழி:- இவ்வளவு பண்புகளையும் அறிந்த நீ அவற்றின்படி ஒழுகுவாயா?

தலைவன்:- நிச்சயமாக நடப்பேன். இது சத்தியம்!

தோழி:- அவ்வாறாயின், உனை நினைத்து உயிரைக் காத்திருக்கும் நின்றன் தலைவியை இப்போதே காப்பாற்றுவாய்!

தலைவன்:- ஆ....தலைவி...நான் துரோகம் இழைத்துவிட்டேன்.



தோழி:- கழிவிரக்கத்திற்கு இது சமயமல்ல! உன் அன்புக்குரியவளைப் பாதுகாக்க இப்போதே புறப்படு!

ஆம்! குதிரைகளைத் தேரிலே பூட்டு! அவள் இருப்பிடம் நோக்கிச் செல்!

தலைவன்:- தோழி! என்னை மன்னிப்பாயா? எனது கண்களைத் திறந்து வைத்தாய்!

தோழி:- ஆற்றங்கரை அரசமரத்தின் தளிர்போலத் தளர்ந்து கொண்டிருக்கும் தலைவியைக் காக்கத் தாமதிக்காது புறப்படுக!

தலைவன்:- தோழி! இதோ! இப்போதே புறப்படுகிறேன்! தலைவியின் துயர் தீர்க்க!

(தலைவன் தேரிலே புறப்படத் தோழியும் தன் இடம் நோக்கிச் செல்லல். தலைவியின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் மகிழ்ச்சி பொங்க நடக்கிறாள்)

திரை மூடுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் சங்க இலக்கியங்களும்

தமிழ் மக்களாகிய நாமனைவரும் பெருமை கொள்ளக்கூடிய சிறப்பு நமது மொழிக்கு வந்தது எப்படியெனில் தமிழ் மொழியின் ஆதியிலக்கியங்கள் எல்லாம் தனித்துவ வழிவந்தமையாலாகும். தமிழிலக்கியங்கள் காலத்தால் முந்திய நூல்கள். இவைகள் பரந்துபட்ட உலகியலறிவும் இயற்கையோடு ஒன்றித்து நின்று அவ்வியற்கை நலன்களனைத்தையும் ஆழ்ந்து நுகரும் உணர்ச்சி வலியும் பொருள்களை நுணுகியாராய்ந்தறியும் அறிவாற்றலும் உடைய தமிழ்ப் புலவர்கள் தாமே புதிதாகப் புணைந்த செய்யுட்களால் இயற்றப்பட்டவையே சங்க இலக்கியங்களாகும். ஆரிய மொழியில் உள்ள சொற்கள் தமிழில் நடைபெற்று வரும் போது அவை வடசொல் எனப்படும். வடமொழி அன்றிப் பிறமொழி எதுவும் எய்தப் பெறாத பழமையும் பெருமையும் மொழி நூல் முடிவும் இலக்கிய வளமும் உடையது தமிழாகும். இலக்கியம் என்ற சொல் தமிழில் எப்படி வந்ததெனில் "இலக்கியம்" என்ற சொற்களின் இணைப்பாகும். இடைக்காலத்தில் தமிழர்கள் தம்மதிப்பிழந்து பிறமொழியில் இ.ருந்தாற்றான் பெருமை என எண்ணி மக்கள் பெயர் முதல் மரபுப் பெயர் ஈறாக உள்ள எல்லாப் பெயர்கட்கும் வடமொழிப் பெயர்களை இட்டு வழங்கினர். பாட்டு உரை எவையாயினும் ஒரு பொருள் பற்றி இலக்கியப் பொருண்மையாலும் இலக்கியத்துக்குரிய செய்யுள் மரபாலும் திராவிட மொழிகளுக்குள்ளே தமிழ் மொழி தான் சிறப்புடையது. சங்க காலத்து நூல்கள் அனைத்தும் தம் மொழி மரபினைப் பின்பற்றி இயற்றப்பட்டன.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் அது இரண்டாயிரம் ஆண்டு காலம் பெருமை மிகு வரலாற்றினை உடையது. இவ்வரலாற்றின் ஆரம்பகாலமென இன்று கொள்ளப்படும் சங்க காலத்திலேயே இலக்கியப் புலவர்கள் பல்வேறு வகையிலான வாழ்க்கை அனுபவங்களைத் துலாம்பரமாகவும் துல்லியமாகவும் சித்திரித்திருக்கிறார்கள். இவை தான் சங்க இலக்கியங்களாகும். மனிதனையும் அவனது வாழ்வையும் புரிந்து கொள்ளவும் வளப்படுத்தவும் மனித சாதியின் தன்மையும் போக்கையும் மாற்றியமைக்கவும் இலக்கியத்தையும்



தமிழையும் கையாள முடியும். காவியச்சுவையிலும் கவிமணிச்சுவையிலும் தமிழரின் நிலைமை உலகிற் சிறந்த மொழி எதனோடும் ஒக்கவும் உயரவும் உரிமை பெற்றது. இதுவரை இல்லாத புதுக்கருத்தும் கலைகளும் உலகில் நிலவுகின்றன. பூத பௌதிகங்களும் தனிப்பொருள் கூட்டுப்பொருள்களும் நாள்தோறும் நாட்டில் எண்ணவும் பண்ணவும் ஏற்படுகின்றன. கலைகள் எல்லாம் தலை சிறந்தோங்க நிரம்பிய அறிவைத்தரும் பெரு நூல்களைத் தாய்மொழிகளிலே இயற்றச் செய்வது இன்றியமையாதது. சொல்லின் திட்பமும் பொருளின் நுட்பமும் ஓர்ந்து சீர்தூக்கி ஒளிரும் நடையுடையது நம் தாய்மொழியாகும். விழுமிய கருத்துக்களை அவர் காலத்திற் சொல்லக் கேட்டவற்றோடு ஒழியாமற் பிற்காலத்தார்க்கும் பயன்படுமாறு எந்த உருவத்தில் செய்யப்படினும் அதுவே செய்யுள் ஆகும். உண்மையே இலக்கியமாகும். சிறிது பொய் விரவினும் அது இலக்கியமன்று. சந்தனத்திலே தீய நாற்றம் கலந்தது போல் காணப்படும்.

இலக்கியம் பழையது. தனியொருவரின் கற்பனைத் திறனிலும் முயற்சியிலும் உருவாகுவது இலக்கியம். இவை உண்மையுடன் வெளிப்படும் கற்பனைகளையும் வார்த்தைகளையும் மூலமாகக் கொண்ட இலக்கிய கர்த்தா அவற்றைப் புரிந்து கொள்ளத் தக்கவர்களை மனதிற் கொண்டு இலக்கியம் படைக்கலாம். கதாநாயகன் ஓங்கியமைவது சிருட்டி கர்த்தாவின் திறனாலேயே. இலக்கியம் என்பது பழைமை தந்த ஒப்பற்ற கொடையாகும். அதுமட்டுமல்ல வரலாற்றின் முக்கிய காட்சியாகவும் அமைகின்றது. இலக்கியச் சான்றுகள் ஒரு நாட்டின் ஒரு சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றி நிற்பவை.

தமிழின் பண்பு யாவர்க்கும் எளிதிற் புலப்படக்கூடியதாய்ப் பிற மொழிகளின் பண்புகளிலிருந்து எளிதில் வேறு காணக்கூடியதாய்த் தெளிவாயுள்ளது. எத்தனையோ மொழிகளோடு கலந்துறவாட வேண்டிய நிலைமை அதற்கு ஏற்பட்டது. எத்தனையோ சமயப் போராட்டங்கள் உட்கலகங்கள் புறக்கலகங்களால் தமிழ் மொழி தாக்குண்டு போனது. இயற்கைச் சக்திகளை வெல்ல வேண்டுமாயின் இயற்கைச் சக்திகளைக் கொண்டே வெல்ல வேண்டும். இயற்கைச் சக்திகளுக்கு அடங்கினாலன்றி இயற்கையை வெல்லுதல் கூடாது. இவ்வாறு இயற்கையோடு ஒன்றித்துச் செய்யுள் இயற்றினர் இயற்கையுணர்ச்சிக்கு வரைவிலக்கணம் வகுத்தது போல் சங்க இலக்கியம் விளங்குகின்றது.

தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியங்கள் பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்க்கையை அதி சாக்கிரதையுடன் படம்பிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றன. அதி வித்தாரமான தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ச்சமூகம் அறநெறிகளில் கொண்டிருந்த அற்புதமான பற்றுதலுக்குச் சங்க இலக்கியங்கள் விளக்கமளிக்கின்றன. சங்க இலக்கியங்கள் என்பது தமிழகத்தோடு யவன தேசத்தினர் வாணிகம் செய்து வந்த பண்டைக் காலத்திலே பிறநாட்டு நல்லறிஞர் சிலர் எழுதி வைத்த குறிப்புக்-களாலுமே தமிழ் மக்கள் பண்டைக்காலத்திற் சிறந்த பண்பாடு உடையவர்களாக வாழ்ந்தனர் என்பது தெளிவாக அறியக் கிடக்கின்-றது. சங்க இலக்கியத்தில் காதலும் வீரமும் தான் சிறப்பாகக் காணப்-படும் அக்காலத்திலே சேர சோழ பாண்டியரெனும் முடியுடைவேந்தரும் பாரி காரி முதலிய குறுகிய மன்னர் பேருக்கமும் நாடு நல்வாழ்வு அடைவதற்கு உயிரையும் உவந்தளித்த மக்கள் தம் வீரவாழ்க்கையும் அறிவுடை ஆன்றோரைப் போற்றிச் சீரிய வாழ்க்கை வாழ்ந்த தமிழர் தம் பண்பாடும் இன்னோரன்ன பலவும் கொண்டுள்ளது. சங்க காலத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் தமிழ் நாட்டில் பற்பல இடங்களிலு-மிருந்து பல நூல்களையும் தனிச் செய்யுட்களையும் இயற்றினர். அவற்றுள் பல அழிந்து பொயின. தனிச் செய்யுட்களுள் அழிந்து போனது போக எஞ்சியவற்றின் அருமை பெருமைகளைப் பிற்காலத்திருந்த அரசர்களும் புலவர்களும் அறிந்து ஆங்காங்கு பற்பல இடங்களிற் கிடந்த செய்யுட்களைத் தேடிப் பெற்றுப் பாதுகாத்தனர் என எண்ணக் கிடக்கின்றது. பின்னொரு காலத்தில் வாழ்ந்த புலவர்கள் அவ்வாறு பேணி வைக்கப்பட்ட பாக்களிற் சிறந்தனவற்றைத் தெரிந்து எட்டுத்-தொகை பத்துப்பாட்டு என்னும் நூல்களைத் தொகுத்தனர்.

சங்கச் செய்யுலில் காணப்படும் பொருள் மரபு அக்காலத்து மக்கள் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு எழுந்துள்ளது. சங்கப்புலவர்கள் தம் நூலுக்கு மக்கள் வாழ்க்கையைப் பொருளாக அமைத்த போது அதனை அகத்திணை புறத்திணை என இரண்டாக வகுத்துப் பிரிதல் முதலிய பல பிரிவுகளையுடையது. பாக்களுள் ஒருவர் பெயரைச் சுட்டிக் கூறாப்பாக்கள் அகத்திணைக்குரியன. சுட்டியொருவர் பெயர் கொள்ளும் காதற் பாக்களையும் போர் முதலிய பிற ஒழுக்கங்களை கூறும் பாக்களையும் புறத்திணையுள் அடக்கினர்.

செய்யுள் வழக்கில் மட்டுமன்றி உலக வழக்கிலும் சங்ககால மக்கள் தூய காதலொழுக்கத்தையும் அறத்தினின்று வழுவாத வீர வாழ்க்கையையும் சிறப்பாகப் போற்றி வந்தனரென்பது அக்கால நூல்கள் வாயிலாக அறியலாம். தமிழ்நாடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையான இயற்கைப் பிரிவுகளையுடையது அவற்றுக்கு முறையே புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்கல் எனும்



ஐந்து அன்பினைந்திணை கொண்ட தூய காதலொழுக்கம் ஆகும். எந்நிலமக்களுக்கு எவ்வொழுக்கம் சிறந்து நின்றதோ அதனை அந்நிலத்திற்குரியதாகக் கொண்டு செய்யுள் இயற்றினர்.

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் தம் உணவுக்கு வேட்டையாடுதல் தினை விளைத்தல் முதலிய தொழில்களைச் செய்து வந்தனர். தினை விளையுங் காலத்தில் அதனை அந்நிலத்து இளம் பெண்கள் பகற்பொழுதிற் காத்து நிற்க ஆடவர் வேட்டையாடச் செல்லுதல் வழக்கமாயிருந்தது. வேட்டை மேல் மனங்கொண்ட காளையரும் தினைப்புனங்காத்து நின்ற இனங்கன்னி-யரும் ஒருவரையொருவர் நினைப்புனத்திற்கு அருகிலுள்ள சோலையிற் கண்டு காதல் கொள்ளுவதற்கும் பின்னர் அக்காதற் பயிரை அவர் வளர்த்தற்கும் ஏற்ற பல வசதிகள் குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கையிற் காணப்பட்டன. அதனால் புணர்தல் என்னும் ஒழுக்கத்தைக் குறிஞ்சி நிலத்துக்குரிய காதலொழுக்கமாகக் கொண்டனர். தலைவி தோழி முதலிய கன்னியர்கள் செலியித் தாய் பொறுப்பில் விடப்பட்டிருப்பர். தினை அறுவடைசெய்ய அக்காவல் ஒழிவதால் தலைவி முதலான கன்னியர்கள் தத்தம் வீட்டுக்குச் சென்று வாழத் தலைவியைச் சந்திக்கும் நோக்மாகத் தலைவன் பகலிற் செல்வது பகற் குறியென்றும் இரவிற் செல்வது இரவுக்குறியென்றும் அழைக்கபடும். பகலாயினும் இரவிலாயினும் தலைவியைத் தலைவன் காண்பதற்கு இயலாதவிடத்து அவளை வரைந்து கொள்வதற்பொருட்டு வரைபு கடாவுதலுண்டு.

குறிஞ்சி முல்லை முதலிய செழிப்புள்ள நிலங்களுக்கிடையே பரந்து கிடந்த வரட்சிப் பிரதேசம் பாலை நிலம் எனப்பட்டது. செழிப்புள்ள அந்நிலங்களைத் தொடுத்து நின்ற வழிகள் பல அக்காலத்திலே பாலை நிலத்தினூடாகச் சென்றன. அவ்வழிகளாற் போன பிரயாணிகள் கொண்டு சென்ற பொருட்களைப் பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் சூறையாடினர். அவ்வாறு ஆறலைத் தலையும் சூறையாடுதலையும் தொழிலாகக் கொண்ட பாலை நிலத்து ஆடவன் அத்தொழிலைச் செய்தற் பொருட்டு இடையிடையே தன் காதலியை விட்டுப் பிரிந்து செல்லுதல் வழக்கறையாயிருந்தது. அதனால் பிரிதலென்னும் காதலொழுக்கம் பாலைநிலத்திற்கு உரியதோர் ஒழுக்கமாயிற்று. இன்பச் சுவையினும் துன்பச்சுவையே மக்களுடைய மனதைப் பெரிதும் கவர்கின்றது. துன்பத்தால் பிரிய முடியாத விடத்து இருவரும் ஒருங்கு செல்வதாகிய உடன் போக்கு என்னும் ஒழுக்கமும் பாலைநிலத்திற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும் காடு சார்ந்த நிலமாக்கிய முல்லை நிலத்தில் வாழ்ந்தோர் ஆயர் எனப்படுவர். அவர் பண்டைக்காலத்திற் பெரும்பாலும் மந்தை மேய்த்தற் றொழிலையே செய்து வந்தனர். தம் நிலத்தினையும் மந்தைகளையும் பகைவரிடத்திலிருந்து காத்தற்பொருட்டுத் தம் நிலத்தின் எல்லைப்புறங்கட்குச் சென்று மாடி வீடமைத்துச் சில நாட்கள் தங்கியிருந்து பகையினை அடக்கி மீளுதல் வழக்கமாயிருந்தது. அரசன் முதுவேனிற் கலைத்திற் பாசறையடைந்து போர் புரிந்து கார் காலத் தொடக்கத்தில் மீண்டு வருதலும் வழக்கமாயிருந்தது. அங்ஙனம் அவன் படைத்தலைவனும் தம் மனைவியை வீட்டில் விட்டுத் தாம் மீண்டு வருவதாகக் குறித்த காலம் வருந்துணையும் அவர் மனைவியர் நம்முடைய துன்பத்தை ஆற்றிக் கொண்டு வீட்டில் இருந்தலும் அப்பருவம் வந்த விடத்தும் அவர் வாராராயின் ஆற்றாமை மீதுரப் பெற்றுத் துன்புறுதலும் பிறவும் முல்லை நில ஒழுக்கங்களைக் கொள்ளப்பட்டன.

வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலம் பிற நிலங்களிற் வளம் மிக்குடையது. நீர்வளம் பெருந்திய அந்நிலத்தில் உழவுத்தொழிலை மேற்கொண்ட அந்நில மக்கள் செல்வச்சிறப்புடையோராய் வாழ்ந்தனர். உணவு தேடுவதிலேயே நம் காலம் முழுவதையும் செலவிட வேண்டிய நிலை மருதநில மக்களுக்குப் பெரும்பாலும் ஏற்படவில்லை. ஆகவே அவர் தம் ஓய்வு நேரத்தை ஆடல், பாடல் முதலிய இன்பக் கலைகளை விருத்தி செய்தலிலும் அறிவை வளர்த்தலிலும் செலவிட்டனர். அவ்வாறு மருத நிலத்து ஆடவர் இராப்பொழுதிற் பெரும் பாகத்தைப் பரத்தையர் வீட்டிற் கழிப்பதை விரும்பாத அவர் மனைவியருக்கு அச்செயல் ஊடல் விளைவிப்பதாயிற்று. அதனால் கூடுதலைப் போன்று காதலருக்கு இன்பம் தரும் ஊடுதலை மருத நிலத்துக்குரிய காதலொழுக்கமாகச் சொள்ளப்பட்டது.

வெண்மணற் குன்றுகளையும் உப்பங்கழிகளையுமுடைய கடற்கரைப் பிரதேசமாகிய நெய்தல் நிலத்தில் மீன்பிடித்தல் உப்பு விளைவித்தல் முதலியவற்றைத் தொழிலாகக் கொண்ட பரதவர் வாழ்ந்தனர். மீன்பிடித்தலிற்குப் படகிலேறிக் காலையிற் சென்ற ஆடவர் மாலைக்கு முன் திரும்பிக் கரைக்கு வராவிடின் அவர் மனைவியரும் பிறரும் அந்திப் பொழுதில் அவரை நினைத்துத் துன்பமுற்று இரங்குவர். அந்நேரத்திற் சூரியன் படுதல், பறவையினம் தம் சேக்கை நோக்கிக் கூட்டங் கூட்டமாய்ப் பறத்தல், கடற்கரையிற் புல் மேயும் விலங்கினம் தம் படுக்கையிடம் நோக்கிச் சேரல் முதலிய இயற்கைக் காட்சிகள் இயல்பாகவே மக்களுக்கு ஒரு சோக உணர்ச்சியைத் தூண்டவல்லன. அக்கடற்கரைப் பிரதேசம் ஆடவரும் இளமங்கையரும் பிறரறியாது



ஒருவரையொருவர் கண்டு தம்முட் காதல் கொள்ளுவதற்கு ஏற்ற புன்னை முதலிய மரங்கள் செறிந்த வெண்மணற் குன்றுகளையுடையது. அவற்றின் கண் நாள்தோறும் காதலனைக் கண்டு இன்புறுங் காதலி ஒரு நாளைக் காயினும் அவனைக் காணாவிடின் துன்புறுவார். அவ்வாறு சில நாட்களாகப் பகல் முழுவதும் காத்து நின்று அவனைக் காணாதவிடத்து அவள் தன்னை விட்டொழிந்தானோ என்னும் கவலை அவன் மனத்தை உறுத்துவதால் அவருக்கு இரங்கல் உண்டாயிற்று. அதனால் இரங்கல் என்னும் அகத்திணை ஒழுக்கம் நெய்தல் நிலத்திற்குரியதாகக் கொள்ளப்பட்டது.

புணர்தல் முதலிய தூய காதலொழுக்கம் ஐந்திணையும் குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களுக்கு உரியனவாக வகுத்த புலவர்கள் மக்களின் போரொழுக்கத்தினையும், வெட்சி, வாகை, வஞ்சி உழிஞை தும்பை என ஐந்தாக வகுத்து ஐவகை நிலங்களுக்குமுரிய புறலொழுக்கங்களாகக் கொண்டனர். குறிஞ்சி நில மக்கள் பிறநிலத்து மந்தைகளைக் கொண்டு போதல் காரணமாக ஏற்படும் பூசல் வெட்சியெனப்படும். அவ்வாறு குறிஞ்சி நிலத்தோர் நிரை கவரச் செல்லும் போது வெட்சிப்பூவைச் சூடிச்செல்வராதலின் அப்போர் அப்பூவாற் பெயர் பெற்றது. பாலைநிலத்தில் வாழ்ந்தோர் மறவர் எனப்படுவர். அவர் போருக்குச் சென்றபோது வாகைப்பூச்சூடிச் சென்றாராகையால் அவர் நிகழ்த்தியபோர் வாகையெப்பட்டது. அவர் அந்நிலத்திற் சென்று போர் புரிந்த போதும் வெற்றிபெற்றன்றி மீண்டிலராகலின் அவர் சூடிச் சென்ற வாகைப்பூ வெற்றிக்கு ஓர் அறிகுறியாகக் காணப்பட்டது.

முல்லை நிலத்து மக்கள் தம் பகைவரை அடக்குவதற் பொருட்டு முல்லை நில எல்லைப் புறங்களுக்குச் சென்று பாடி வீடமைத்துத் தங்கியிருந்து நிகழ்த்திய போர் வஞ்சியெனப்பட்டது. மருத நிலத்துப் போர் உழிஞையாகும். பண்டைக் காலத்தரசர்கள் இயற்கையரண் பொருந்திய இடங்களைத் தெரிந்து அவற்றைத் தம் இருப்பிடமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். மருத நிலத்தில் தம் இருப்பிடமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். மருத நிலத்தில் இயற்கையரண் காண்டல் அரிதாகலின் அந்நிலத்தில் வாழ்ந்த அரசனும் மக்களும் பகைவரிடத்தின்று தம்மையும் தம் பொருள்களையும் காத்தற் பொருட்டுச் செயற்கையரணுமின்றி மணல் பரந்த வெளியாகிய நெய்தலில் நடைபெற்ற போரொழுக்கம் தும்பை எனப்படும். வேந்தனொருவன் தன் வலியை உலகோர் புகழ்தலையே பொருளாகக்கருதிப் பகைவேந்தன் மேற்செல்ல அப்பகை வேந்தனும் அப்புகழ்தலையே கருதி அவனை ஒரு கணத்தெதிர்த்து அவன் வலியினை அழித்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் வழக்கில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு இவையும் சங்க இலக்கியங்களுக்குள் அடங்கும். சங்கப்புலவர்கள் காதலொழுக்கங்களையும் போரொழுக்கங்களோடு பாக்களையும் நூல்களையும் தொகுத்தனர். எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் நூல்களிலே தொகுக்கப்பட்ட செய்யுட்கள் யாவும் சங்கச் செய்யுட்களென்றே கருதப்படுகின்றன. அந்நூல்களைத் தொகுத்தோர் புறத்திணைக் கூறும் பாக்களுள் நானூறு பாக்களைத் தெரிந்து புறநானூறு என்னும் நூலாகவும் நூறு பாக்களைத் தெரிந்து பதிற்றுப்பத்தென்னும் நூலாகவும் தொகுத்துள்ளனர். அக்காலத்திலே தமிழ் நாட்டை ஆண்ட அரசர்களின் வீரச் செயல் கொடைசிறப்பு ஆட்சித்திறன் முதலியவற்றையும் சங்க கால மக்களுடைய அறவொழுக்கம் வாழ்க்கைச் சிறப்புப் போர் முறைகள் முதலியவற்றையும் சங்கத்துச் சான்றோரெனப் பாராட்டப்பட்ட அக்காலத்துப் புலவர்களுடைய சிறப்புடைக் குணங்களையும் புறநானூற்றுச் செய்யுட்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அக்காலத்தில் வாழ்ந்த முடியுடை வேந்தர்கள் குறுநில மன்னர்கள் கடையெழுவள்ளல்கள் முதலானோருடைய சரித்திரங்களை நாம் அறிந்து கொள்ளுதற்கும் இந்நூற் செய்யுட்கள் பயன்படுகின்றன. உள்ளதை உள்ளவாறே கூறும் இயல்புடைய இவைகள் கருதிய பொருள் விரைவிற் புலப்படுவதற்கு வேண்டிய சொற்களையமைத்துப் புலவர்கள் செய்யுட் செய்தமையால் அவையாவும் பொருட்டெளிவுடையனவாக விளங்குகின்றன.

புறநானூற்றுச் செய்யுட்களுள் பெரும்பாலானவை அக்காலத்தில் வாழ்ந்த முடியுடைவேந்தர் குறுநில மன்னர் வள்ளல்கள் முதலானோரின் வீரக்குறிப்பு, கொடைச் சிறப்பு அறநெறிவழுவா ஆட்சிமுறை முதலியவற்றைப் புனைந்து கூறுகின்றன. அவற்றுட் பல அம்மன்னர் முதலானோரின் முன்னிலையில் நின்று அவர்களின் முகக்குறிப்பு. தோற்றப் பொலிவு முதலியவற்றை நேரிலே பார்த்துப் பாடியவையாகக் காணப்படுகின்றன. அக்காலத்து மன்னர்கள் புலவர்களைப் பெரிதும் மதித்து அவர்களாற் பாடற்பெறுதல் பெரும் பேறெனக் கருதி வாழ்ந்தனர். அதனால் அப்புலவர்களும் அரசர்களின் வீரச் செயல்களையும் கொடைச் சிறப்பினையும் தக்கவாறு பாராட்டிப் பாடினர். உணர்ச்சியைப் புலப்படுத்தும் வல்லமை சங்கப்புலவர்க்கு உண்டு. என்றுமிறவாத இன்பத்தமிழ்ப்பாக்களைச் சங்கப்புலவர்கள் எப்படிப் பாடினர் என்பதை ஆராய்வோமாயின் அப்புலவர்களின் பெருமையை நாம் தெளியலாம்.

ஆழ்ந்த கருத்துக்களை இனிய மொழி நடையில் தெளிவாக பாடுதற்கு அவர்கள் கல்வியறிவு மட்டுமன்றிச் சீரிய ஒழுக்கமும்



காரணமாயிற்று. உள்ளத்தில் ஒளியுடண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாக்கும் என்னும் உண்மையைக் காட்டுவனவாகச் சங்க இலக்கியங்கள் யாவும் விளங்குகின்றன. அங்ஙனம் நற்குணங்கள் யாவும் அமையப்பெற்ற சங்கப் புலவர்கள் பெருந்தொகையினராக அக்காலத்தில் வாழ்ந்தமையால் சங்க காலத் தமிழகம் சிறப்புற்று விளங்கிற்றெனலாம். நாட்டின் நலன் கருதி அவர்கள் எவ்வெவ் வழிகளிற் சென்று உழைத்தனர் என்பதையும் அரசன் முன்னிலையில் அஞ்சாது நின்று அறவழிகாட்டி நாட்டினை நல்வழிப்படுத்திய வகையினையும் புறநானூற்றுச் செய்யுட்கள் தெளிவாகக் காட்டுகின்றன. புலவனுடைய உள்ளமானது குழந்தையினுடைய உள்ளத்தை ஒருவாறு ஒத்திருக்கின்றது. இயற்கைக் காட்சிகளைக் கண்டு குதூகலங்கொள்ளுதல், சொல்லையும் அது குறிக்கும் பொருள் உணர்ச்சி முதலியவற்றையும் அவதானித்தல். கற்பனையுலகிற் சஞ்சரித்தல் ஆகியன குழந்தையிடத்திலும் புலவனிடத்திலும் காணப்படும் சிறப்பியல்பு ஆகும். குழந்தைப் பருவம் ஒருவனை விட்டு நீங்கவே அப்பருவத்திற்குரிய சில சிறப்பியல்புகளும் அவனை விட்டுப் பெரும்பாலும் அகன்று விடுகின்றன. அவ்வாறு அது நீங்கினும் கற்பனையுலகிற் சஞ்சரித்தல் முதலிய சிறப்பியல்புகள் அவனை விட்டு நீங்காது. வளர்ந்து வருமாயின் அவன் சிறந்த புலவனாவான். அதனால் ஒரு சமுதாயம் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போது அதன் கண்ணுள் மக்களுட் பலர் தம் உணர்ச்சியைப் புலப்படுத்தும் பாக்களைப் பாடக்கூடிய ஆற்றலுடையோராய் இருத்தலும் சமுதாயம் வளர்ச்சியுறத் தொடங்க அத்தகைய புலமையுடையோர் நிறைந்து போதலும் இலக்கிய வரலாற்று நூல்கள் கூறும் உண்மையாகும்.

இதனாலேயே ஒரு மொழியிற் செய்யுளிலக்கியம் முதலிற் தோன்றும். அதனைத் தொடர்ந்து உரை நடை இலக்கியம் தோன்றுகின்றது. தமிழ் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியை நோக்கும் போது சங்க காலத்துச் சமுதாயம் கற்பனையுலகிற் சஞ்சரித்தல் முதலிய சிறப்புடைப் பண்புகளையுடையதாய் விளங்கியமையால் அச்சமுதாய்தின் கண் பல சிறந்த புலவர்கள் தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. ஒரு புலவனிடத்தில் காணப்படும் சிறப்பியல்புகளுள் தெளிந்த உள்ளமும் ஒன்று. விருப்பு வெறுப்புகளாலேற்படும் இன்ப துன்பங்கள் ஒருவன் மனத்தைத் தாக்கிக் கொண்டிருக்குமாயின் எத்துனை நூலறிவிருந்த போதிலும் அவ்வுள்ளத்தில் உண்மையறிவும் உயர்ந்த கவிதையும் உதிக்கமாட்டா. சங்ககாலப்புலவர் உள்ளத்தில் தெளிவும்அறவுத் தன்மையும் குடிகொண்டிருத்தலை அவர் தம் செய்யுட்களே சான்றாகும். மக்களின் நடையுடை பாவனைகள் காலத்திற்கு காலம் வேறுபடுவது போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் வழக்கு முதலியனவும் வேறுபடுதல் இயல்பாகும். அக்காலப் பகுதியில் மக்கள் வாழ்க்கை மிக விரைவாக முன்னேறிற்றென நூல்களால் அறியக்கிடக்கின்றது. வாழ்க்கையில் உண்டான மாற்றங்களுக்கு இணங்கச் செய்யுள் மரபும் மாற்றமடைந்துள்ளது.

ஐவகை நிலங்களுட் பாலை நிலம் வரண்ட பிறதேச மாதலாலும் அந்நிலத்தில் வாழ்ந்த மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அந்நிலத்திலிருந்து பெற முடியாமையாலும் அந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் குறிஞ்சி முதலிய ஏனை நிலங்களிற் சென்று வாழநேர்ந்தது. அங்ஙனம் வாழ்ந்த காலத்தில் ஐவகை நிலங்களுக்கும் உரியனவாக வழக்கிலிருக்கும் ஐவகை பொருள்களும் பாலை ஒழிந்த நால்வகை நிலங்களுக்கு உரியனவாகக் கொள்ளப்பட்டன. ஆகவே, பிரிதல் உடன் போக்கு என்னும் பாலையொழுக்கங்கள் குறிஞ்சி முதலிய ஏனைய நிலங்களுக்கு உரியனவாயின. பாலை நிலத்தில் மக்கள் வாழ்ந்த காலத்திற் பிரிவு பொருள் வயிற் பிரிவாக இருந்தது. அது பிற்காலத்தில் ஓதற்பிரிவு தூதிற் பிரிவு பகைவயிற் பிரிவு என மக்கள் வாழ்க்கைக்கு இணங்கப் பலவகைப்படலாயிற்று. சங்ககாலத் தொடக்கத்தில் அன்பிணைந்திணையாகிய ஐவகைக் காதலொழுக்கங்களே வழக்கிலிருந்தன. அக்கால முடிவிற் கைக்கிளை பெருந்திணையாகிய இரண்டு ஒழுக்கங்கள் சேர்ந்து அகத்திணை ஒழுக்கங்கள் ஏழாயின வழக்கு மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களே காரணமாகும்.

மக்களுடைய ஒழுக்கங்களும் மனோபாவங்களுந்தான் சங்க இலக்கியத்திற்குப் பொருளாகும். காதல், வீரம் முதலிய பண்புகளைச் சங்கப் புலவர்கள் சித்தரித்துக் காட்டும் வகை வியக்கத்தக்கது. அவர்கள் இயற்கையின் பல வகைக் கோலங்களையும்சித்தரித்துக் காட்டுகின்றரெனினும் இயற்கை வருணனை சங்க இலக்கியத்தில் முதலிடம் பெறவில்லை. மக்களுடைய ஒழுக்கந் தான் முதலிடம் பெற்று விளங்குகின்றது. அதனைக் கூறுமிடத்து அதற்கிணங்க இயற்கைக் காட்சிகள் சித்தரிக்கப்படுகின்றன. இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையது அக்கால மக்களின் வாழ்க்கை. பூக்களாலும் தழை கொடிகளாலும் நம்மை அலங்கரித்துக் கொள்வதில் அவர் பெரும் விருப்புடையர். அக்கால அரசர் சிலர் மயிலுக்குப் போர்வையும் முல்லைக்கு தேரும் ஈந்த செய்திகள் இயற்கைக் காட்சிகளில் அக்கலை மக்களுக்கிருந்த ஈடுபாட்டினை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அகத்திணை ஒழுக்கங்களைக் கூறும் செய்யுட்களில் ஆங்காங்கு இயற்கைக் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் சிறப்பாக வருணிக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.



சங்க இலக்கியங்கள் தனிச்சிறப்பினைப் பெற்று விளங்குவதற்குக் காரணம் அக்கால மொழிநிலையாகும். ஆரியம் முதலிய பிற மொழிகளிலுள்ள சொற்களுட் பெரும்பாலான பல எழுத்துக்களாலானவை தமிழ் மொழியிலுள்ள சொற்களே சில எழுத்துக்களாலானவை. அவற்றுள்ளும் சங்ககாலத்தில் வழங்கிய தமிழ்ச் சொற்கள் மூன்று நான்கு எழுத்துக்களை இகவாதன. சொற்கள் பல ஒன்றோடொன்று தொடர்ந்து செல்லும் போது உருபு முதலியன விரியாது தொக்கு நிற்பதே சங்க காலத்தில் பெருவழக்காயிருந்தது. இவ்வாறு சில எடுத்துக்களாலான சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து வரும் பொழுது உருபுகள் விரியாதுவரின் சொற்செறிவு ஏற்படுகின்றது. பிற்காலப் பகுதிகளிற் புலவர் கள் பல சொற்றொடர்களால் விரிந்துரைத்த பொருளையெல்லாம் அக்காலப் புலவர்கள் தொகைகளை அமைத்தும் அடைகள் புணர்த்தியும், பெயர்ச்சொற்களுக்கு விகுதிசுட்டிவினையாக்கியும் இன்னோரன்ன பல முறைகளாற் சுருக்கிய மொழியிற் விரிந்த பொருளை அமைத்துச் செய்யுட் செய்தனர். சொற்சுருக்கமும் பொருட்செறிவுடைய சொற்றொடர்களும் வினைத்தொகை முதலிய தொகைகளும் பிறவும் சங்ககால வழக்கில் மிகுதியாகப் பயின்று வந்தமையாலே சங்கத்தமிழ் சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளை விளக்கும் திறமுடையதாகி விளங்கிற்று. அக்காலச் செய்யுட்கள் பிற்காலப் பகுதிகளில் எழுந்த செய்யுட்களில் சிறந்தனவாகக் காணப்படுதற்கு அக்கால மொழி நிலையினையும் ஒரு காரணமாகக் கூறலாம்.

சங்க காலத்திலே குறிஞ்சி முதலிய நிலங்களில் வாழ்ந்த மக்கள தத்தமக்குரிய நிலங்களின் நன்மைக் கிணங்க இயற்கையோடு கூடிச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். தத்தம் நிலங்களின் நன்மைக்கிணங்க அவர்களின் வாழ்க்கையும் அமைந்திருந்தது. ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் தத்தம் நிலத்திற்கும் தொழிலிற்கும் ஏற்புடையனவாயிருந்த பழக்கவழக்கங்களைப் போற்றி ஒழுகி வந்தமையால் பண்பாட்டு வளர்ச்சி ஒவ்வொரு நிலத்து மக்களிடையேயும் காணப்பட்டது. வாழ்க்கை முறை முதலியவற்றில் வேறு வேறு நிலங்களிலிருந்த மக்கட் குழுவினரிடையே வேறுபாடு இருந்த போதிலும் அவர்களுக்கிடையே உயர்வு தாழ்வு பாராட்டப்படவில்லை யென்றும் எல்லோரும் ஒரு குடும்பத்திலுள்ளவர்களைப் போலவே தம்மை மதித்து வாழ்ந்து வந்தனரென்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

பண்டைக்காலத்தில் முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என முச்சங்கள் வரன்முறையே பாண்டிநாட்டிலிருந்து தமிழை வளர்த்து வந்தன. அவை வீற்றிருந்த விடங்கள் முறையே தென் மதுரை கபாடபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை என்பன. பண்டைக்காலத்திலே பாண்டி நாடு குமரி முனைக்குத் தெற்கே பல காததூரம் பரந்து கிடந்தது என்று கூறப்படுகிறது. அந்நிலப்பரப்பில் பாண்டியருடைய தலை நகரமாகிய தென்மதுரை அமைக்கப்பட்டிருந்தது. முன்னொரு காலத்தில் அந்நிலப் பரப்பில் ஒரு பகுதியும் தென் மதுரையும் கடல் கொள்ளப்படவே அதற்கு வடக்கிலிருந்த நிலப்பரப்பு கபாடபுரம் என்னும் நகரைப் பாண்டியர் அமைத்து அங்கிருந்து தமது நாட்டை ஆண்டு வந்தனர் பின்னொரு காலத்தில் அந்நகரிருந்த நிலப்பரப்பையும் கடல் கொள்ள அவர்கள் குமரி முனைக்கு வடக்கே சென்று இப்போதுள்ள மதுரையை அமைத்து அதன் கண்ணிருந்து ஆட்சி புரிந்து வந்தனர்.

பாண்டியர் தென் மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்த காலத்திலே தமிழை வளர்த்தற்கு அந்நகரில் நிலவிய தமிழ்ச்சங்கம் முதற் சங்கம் என்றும் அவர்கள் கபாடபுரத்தில் இருந்த காலத்தில் நிறுவிய சங்கம் இடைச்சங்கம் என்றும் இப்போதுள்ள மதுரையில் அவர்கள் இருந்த காலத்தில் நிறுவிய சங்கம் கடைச்சங்கம் என்றும் அழைக்கப்பட்டன.

முதற் சங்கத்தில் அகத்தியர் முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய புலவர்களும் இடைச்சங்கத்திலே தொல்காப்பியர் வள்ளுவர்ப்பாப்பியன் முதலிய புலவர்களும் கடைச்சங்கத்திலே கபிர் பரணர் நக்கீரார் முதலிய புலவர்களுமிருந்து தமிழை ஆராய்ந்தன ரென்பர்.

பண்டைக்காலத்திலே தமிழ் நாட்டிலிருந்து தமிழ் மொழியை வளர்த்து வந்த பேரறிஞர்களுள் அகத்தியர் தலை சிறந்தவரென்றும் அவர் சிவ பெருமானிடத்தில் தமிழைக் கேட்டறிந்தனரென்றும் அவருக்கு இருப்பிடம் பொதியமலையென்றும் கூறுவர். அவர் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் முத்தமிழையும் கற்று அகத்தியம் என்றும் நூலென்றை இயற்றினார்.

இலக்கணத்தோடு கூடிய தமிழ் இயற்றமிழ். அது உரையும் பாட்டு என இருவகைப்படும். பாட்டு இசையோடும் தாளத்தோடும் கூடிய விடத்து இசைத்தமிழ் எனப்படும். உரையும் பாட்டும் அபிநயத்தோடு கூடிய விடத்து நாடகத்தமிழ் எனப்படும். அகத்தியரிடம் தொல்காப்பியர் அதங்கோட்டாசிரியர் காக்கை பாடினியார் முதலிய மாணாக்கர் பன்னிருவர் கல்வி கற்றனர் என்பர்.

அவர்கள் அகத்தியத்திற்கு வழி நூலாகத் தொல்காப்பியம் வாய்ப்பியம் அவிநயம் காக்கை பாடினியம் முதலிய பல நூல்களை இயற்றினரெனவுங் கூறுவர். பண்டைக்காலத்து நூல்களுள் தொல்காப்பி-



யம் இறையனாரகப் பொருள் என்னும் இலக்கண நூல்களும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் இலக்கிய நூல்களுமே நமக்குக் கிடைத்துள்ளன. எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் தொகை நூல்கள். எட்டாவன அகநானூறு, புறநானூறு, நற்றிணைநானூறு, குறுந்தொகை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை என்பன. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பட்டினப் பாலை, மலைப்படுகடாம் என்னும் நெடும்பாட்டுக்கள் பத்தினைக் கொண்ட நூல் பத்துப்பாட்டு எனப்படும். நூல்கள் எட்டினுள்ளே புறநானூறு பதிற்றுப் பத்து பரிபாடல் என்னும் மூன்றும் புறத்திணை கூறுவன. ஏனைய ஐந்தும் அகத்திணை கூறுவன. பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப் பாட்டு முல்லைப்பாட்டு பட்டினப்பாலை என்னும் மூன்றும் அகத்திணைப் பாட்டுக்கள், ஏனைய ஏழும் புறத்திணைப் பாட்டுக்கள், எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்னும் நூல்களிலே தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்கள் யாவும் சங்கச் செய்யுட்களென்றே கருதப்படுகின்றன.

பதிற்றுப்பத்து என்னும் நூல் சேரமன்னர் பதின்மர் மீது பத்துப் பத்துப் பாக்களாகப் பாடப்பட்ட நூறு செய்யுள்களைக் கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு பத்தும் தனித்தனியே ஒவ்வொரு புலவராற் பாடப் பெற்று ஒவ்வொரு சேர அரசரரைப் பாராட்டுகின்றது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பாட்டின் பெயர் என்பன குறிக்கப்பட்டுள்ளன. அதை நோக்குமிடத்து இயற்றமிழுக்கு உரிய அகவற்பாவாலும் வஞ்சிப்பாவாலும் ஆகிய செய்யுட்கள் பிற்காலத்தில் இசையுடன் பாடப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அவ்வப்பத்தின் பாட்டுடைத் தலைவன் பெயர், செயல், ஆண்ட காலம் என்பவற்றையும் செய்யுட்களைப் பாடிய புலவனின் பெயர் அவன் பெற்ற பரிசில் முதலியவற்றையும் குறிக்கும் பதிகம் உண்டு. அவை ஆசிரியப்பாவாகத் தொடங்கிக் கட்டுரை நடையாக முடிகின்றன. அவை சோழப்பெருமன்னர் காலத்தில் எழுந்த சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்திகளை ஒத்திருக்கின்றன.

அகத்திணை கூறும் பாக்களுள் நூலொன்றுக்கு நூனூறு பாக்களாக ஆயிரத்திருநூறு பாக்களை நற்றிணை குறுந்தொகை அகநானூறு என்னும் நூல்களிலே தொகுத்துள்ளனர். அவையாவும் அகற்பாவாயுள்ளன. குறுந் தொகை செய்யுட்கள் நாலடியைச் சிற்றெல்லையாகவும் எட்டடியைப் பேரெல்லையாகவும் உடையன. . நற்றினைச் செய்யுட்கள் ஒன்பதடியைச் சிற்றெல்லையாகவும் பன்னீரடியைப் பேரெல்லையாகவும் உடையன. அக நூனூற்றுச் செய்யுட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின் மூன்றடியைச் சிற்றெல்லையாகவும் முப்பத்தோரடியைப் பேரெல்லையாகவும் உடையன.

அகத்திணை ஐந்தனுக்கும் தனித்தனி நூறு செய்யுட்களாக ஐந்நூறு செய்யுட்களைக் கொண்டது ஐங்குறுநூறு. இதன் கணுள்ள செய்யுட்கள் யாவும் மூன்றடியைச் சிற்றெல்லையாகவும் ஆறடியைப் பேரெல்லையாகவும் உள்ள பாக்கள் கொண்ட பத்துப் பிரிகளை-யுடையன. பத்துச் செய்யுட்களைக் கொண்ட ஒவ்வொரு பிரிவும் பெரும்பாலும் ஒவ்வொரு துறை குறித்து நிற்றலையும் ஒவ்வொரு பெயர் பெற்று விளங்குதலையும் காணலாம். இந்நூலிலுள்ள பத்துக்களுள் மருதத்திணை கூறும் பத்துக்கள் முதலில் அமைக்கப்பட்டுள்ளன. அவை வேட்கைப் பத்து, கண்வன் பத்து, தோழிக்குரைத்த பத்து முதலியன. வேட்கைப் பத்து என்பது வேட்கையைப் பற்றிக் கூறிய பத்து என விரியும். அதன் கண்தோழி தலைவனுக்குத் தனது வேட்கையைக் கூறுகின்றாள். வேழப்பது என்பது வேழம் என்னும் சொல்லை அமைத்துப் பாடிய பத்துச் செய்யுட்கள் என விரியும். அப்பத்திலுற்ற ஒவ்வொரு செய்யுளிலும் வேழம் என்னும் சொல் அமைந்துள்ளது. தலைவி தலைமகனது கொடுமையைப் பற்றித் தன் தோழிக்கு உரைத்ததாதலின் தோழிக்குறைந்த பத்து என்ற பெயரைப் பெற்றுள்ளது. இவ்வாறே இந்நூலிலுள்ள பத்துக்கள் யாவும் கருப்பொருள் கூற்று முதலியன கொண்டு அமைக்கப்பெற்ற பெயர்களை-யுடையனவாக உள்ளன. அன்பினைந் திணைகள் மருதம் நெய்தல் குறிஞ்சி பாலை முல்லையென முறையே அமைக்கப்பட்டுள்ளன. மருதத் திணையில் முதலாவதாக உள்ள வேட்கைப் பத்திற் காணப்படும் பத்துச் செய்யுட்களிலும் "வாழியாதன் வாழி யவினி " என்னும் அடி முதலில் வருதலால், அக்காலத்தில் வாழ்ந்த சேரவேந்தராகிய ஆதனவினியை வாழ்த்தும் நோக்கமாகக் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூலிலு-ள்ள பல செய்யுட்கள் முதல், கரு உரி என்னும் மூன்றினையும் சுருங்கிய அடிகளில் நயம்பட அமைத்துக் கூறுகின்றன. தொல்காப்பியத்துக்கு உரை கண்ட இளம் பூரணர் முதலானோர் பற்பல இடங்களில் இந்நூற் செய்யுட்களை மேற்கோளாகக் காட்டியுள்ளனர். புறநானூறு நற்றிணை முதலிய நூல்களிலுள்ள செய்யுட்களுக்கும் இந்நூலிலுள்ள செய்யுள்-களுக்குமிடையே பொருளமைப்பிலும் மொழி நடையிலும் பிறவற்றிலும் வேறுபாடு காணப்படலால் இந்நூல் கபிலர் பரணர் காலத்துக்குப் பிற்பட்டது எனச்சிலர் கருதுகின்றனர்.

நூற்றைம்பது பாக்களைக் கொண்டுள்ள கலித்தொகை. திணைக்-கொரு பிரிவாகக் குறிஞ்சி முதலிய ஐந்திணைக்கும் பிரிவுகளை-யுடையது. தலைவன் தலைவி தோழி முதலியோர் ஒருவரோடொருவர்



உரையாடும் பான்மையில் இந்நூலிலுள்ள பாக்கள் அமைந்துள்ளன. இவ்வாறு அவை நாடகப்போக்கில் அமைந்திருத்தலும் சொற்சுவை பொருட்சுவையுடையனவாகத் திகழ்தலும் இசையோடு கூடிப் பாடப்படும் பண்பினையுடையன வாயிருந்தலுமாகிய இச்சிறப்புக்களைக் கொண்-டுள்ளனவாதலின் அவை படிப்போர்க்குப் பெரிதும் இன்பந்தரவல்லன. அதனால் இந்நூலைக் கற்றறிந்தார் போற்றுங்கலி எனப் பெரியோர்கள் பாராட்டினர். இந்நூலிலுள்ள ஐந்து பிரிவுகளையும் பாலைபாடிய பெருங்கடுக்கோ முதலான சங்கப்புலவர்கள் ஐவர் பாடினர். கலித்தொகைப் பாக்களின் மொழிநடைப் போக்கு. பொருளமைதி, அவை குறிக்கும் மரபு, பண்பாட்டு நிலை, அவற்றின் கண் வந்துள்ள வட மொழிக் கதைக்குறிப்புக்கள் முதலியவற்றை நோக்குமிடத்து இந்நூலிலுள்ள பாக்களுட் பெரும்பாலானவை சங்க காலத்திற்குப் பின்னே தோன்றியவை எனச் சிலர் கூறுகின்றனர்.

நெடும் பாட்டுக்கள் பத்தினைக் கொண்ட நூல் பத்துப்பாட்டு எனப்படும். அப்பாட்டுக்கள் பல அகவற்பாலாயுள்ளன. சில அகவலோடு வஞ்சி கலந்த பாட்டுக்கள். பத்துப்பாட்டிலுள்ள பாக்கள் யாவும் நூறு அடிக்கு மேற்பட்டவை. செய்யுள் வடிவிலுள்ள யாவும் பொதுவாகப் பாட்டு என்ற பெயரைப் பெறக்கூடியனவாயினும் பத்துப்பாட்டிலுள்ளவற்றையே சிறப்பாகப் பாட்டெனப் பாராட்டியுள்ளனர். அவை யாவும் கூறுவதாற்கு எடுத்துக் கொண்ட பொருளை வேண்டிய அளவிற்குத் திறம்படக் கூறுகின்றன. அதனால் அவை பாட்டு எனப் பெயர் பெற்றன போலும். அவற்றுள் முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாமாலை என்பன மூன்றும் அகத்திணையிற் பாற்படுவன. புறத்திணைக்குரிய ஏனைய பாட்டுக்களுள் ஐந்து ஆற்றுப்படைச் செய்யுட்கள். அவையாவன: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும் பாணாற்றுப்படை, மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை என்பன. ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல் என்னும் பொருளையுடையது.

கூத்தர், பாணர் முதலியோர் ஒரு வள்ளலிடஞ் சென்று பெருஞ் செல்வத்தைப் பெற்று மீண்டு வரும் வழியில் வறுமைப் பிணியால் வாடிய இரவலரைக் காணின் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த இரவலர்க்கு எடுத்துக்கூறி அவ்வள்ளலிடம் அவர்களும் சென்று பொருளைக் பெறுமாறு தாம் சென்ற வழியைக் கூறி அவ்வழியாற் போகச் செய்தல் ஆற்றுப்படை எனப்படும். வீடு பேறுகருதி நின்றாரை முருக-னிடத்தில் ஆற்றுப்படுத்தியதாகக் கூறப்படும் திரு முருகாற்றுப்படை இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் போன்று ஏனைய பாட்டுக்களுக்கு முதலில் வைக்கப்பட்டுள்ளது. பொருளமைப்பிலும் மொழி நடையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படைக்கும் ஏனைய ஆற்றுப்படைகளுக்குமிடையே வேற்றுமை இருத்தலால் அதனைச் சங்கப்புலவர் நக்கீரர் பாடவில்லை என்றும் அது பிற்காலத்தது என்றும் ஆராய்ச்சியானார் கூறுகின்றனர்.

புறநானூறு என்ற சங்ககாலத்துத் தொகை நூலையெடுத்தால் இவை தமிழ் மொழி நூலொன்றினைப் பின்பற்றி இயற்றப்பட்டன. தமிழ் மொழியிலுள்ள ஆதியிலக்கியங்களாகிய எட்டுத்தொகை நூல்களோவெனின் தமிழிற்கே சிறந்துரியவாய் வடமொழியிலக்கண இலக்கியங்களிற் காணப்பெறாதவாயுள்ள இலக்கணமமைந்த செய்யுள் வகைகளால் இயன்றுள்ளன. அகவற்பா கலிப்பா வெண்பா முலியன தமிழிற்கே தனித்துரிய செய்யுள் வகைகளாலும் இவைகள் தமிழ் மக்கள் தொன்று தொட்டு வழக்கு நிரம்பிய தொடரமைதிக்கும் தமிழ் மக்களது செவியுணர்விற்கொத்த இசையினிமைக்கும் பொருந்துமாறு அமைந்தன. தமிழிற்கே தனியுரிமையென முத்திரையிடப் பெற்று வெளிப்போந்து வீறுற்று உலவின.

மொழி வளர்ச்சி பூர்வ காலந்தொட்டு நந்தமிழ் நாடு வாணிகத்தில் மிகச் சிறந்த தொன்றாய் இருந்து வந்தது. கிரேக்கர்களும் உரோமரும் அராபியரும் சீனரும் வாணிகத்தின் பொருட்டுத் தமிழ் நாடு வந்து தங்கள் பண்டங்களை விற்று. முத்து முதலிய தமிழ் நாட்டுப் பண்டங்களைக் கொண்டு தாங்கள் தங்கள் தேசத்திற்குச் சென்று வருவாராயினர். இவ்வயல் நாட்டினருள் ஒரு சிலர் தமிழ் நூட்டிற் பலவிடங்களிலும் நிலையாய்க் குடியிருந்தோருமுளர். இவர்கள் வாழ்தற்கெனத் தனியே அமைக்கப்பட்ட ஊர்ப்பகுதிகளும் காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களில் இருந்தனவென்பது சிலப்பதிகாரம் கூறுகின்றது. வணிக மூலமாக ஏற்பட்ட மொழி வளர்ச்சி ஒரு பாலிருப்பத் தமிழ் மக்கள் நம் நூட்டிற் குடியேறிய அந்நியர்களோடு பயின்று வந்தமையாலும் அடுத்துள்ள பிறநாடுகளுக்குச் சென்று வாழ்ந்து பின் திரும்பித் தம்மவரோடு கலந்திருந்தமையால் மொழி வளர்ச்சி ஏற்பட்டது.

சங்க கால இலக்கியம் என்று கூறப்படும் காவியம் சிலப்பதிகாரம் ஒன்றாகும். சிலப்பதிகாரக் கதையை இளங்கோவடிகள் காலத்தில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சி. துன்பம் மீதூரப் பெற்ற பெண்ணொருத்தி தன் முலையொன்றை அறுத்தெறித்த வரலாறு இதில் உள்ளது. சிறந்த ஆடவர்க்குரிய இலக்கணங்கள் யாவும் பொருந்தப்பெற்ற கோவலனைத் தலைவனாகவும் கற்புக்கரசியாக விளங்கிய கண்ணகியைத் தலைவியாகவும் கொண்டு செய்யப்பட்ட சிலப்பதிகாரம் ஒரு சோக நாடகத்தை ஒத்திருக்கிறது. இயல் , இசை, நாடகம் என்னும் முத்தமிழும்



விரவிவரப் பெற்றமையால் அது முத்தமிழ்க் காவிய மென்றுங் கூறப்படும். இளங்கோவடிகள் காலத்துப் பண்பாடு அரசியல் முறை முதலியவற்றைப் பற்றியும் இயலிசை நாடகமாகிய முத்தமிழின் நிலையைப் பற்றியும் நாம் அறிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த கருவியாக விளங்கும் இந்நூல் கலைச்சிறப்பும் கவிதைப் பண்பும் நிரம்பப் பெற்ற ஒரு பேரிலக்கியமாகும். இந்நூற்கதை மக்களுடைய நெஞ்சைப் பிணித்ததனாலே முற்காலத்திலிருந்தே அது நாடகவுருவத்தில் மக்களை மகிழ்வித்து வந்திருக்கின்றது. சேரர்குடியிற் பிறந்து இளம் பிராந்தியத்திலேயே துறவறம் பூண்ட இனங்கோவடிகளுடைய நெஞ்சம் தமிழருடைய பண்பாட்டிலும் கலை வளத்திலும் ஊறிக் கிடந்தது என்பதை இந்நூல் தெளிவாகக் காட்டுகின்றது.

மதுரைக் கூலிவாணிகன் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலை யென்னும் காவியத்தில் கோவலன் இறந்த பின் மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் பௌத்த சங்கத்தைச் சார்ந்து வாழ்ந்த கதையையும் மணிமேகலை துறவொழுக்கம் பூண்டு அறவண அடிகள் பாற் தரும உபதேசம் பெற்ற கதை கூறப்படுகின்றது. இந்நூலாசிரியர்பௌத்த சமயச் சித்தாந்தத்தையும் பௌத்த சாதகக் கதைகளையும் நன்கு கூற்றறிந்த பெரியா ரென்பதையும் பௌத்த சமயக் கொள்கைகளையும் துறவொழுக்கத்தின் பெருமையையும் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டி அச்சமயத்தை நாட்டிற் பரவச் செய்யும் நோக்குடன் இந்நாலை இயற்றினார்.

இலக்கியத்தில் காதல் பெற்றிருந்த இடத்தைத் துறவும் பெற்றது. உதயகுமரன் என்னும் இளவரசன் மணிமேகலையிடத்திற் காதல் கொண்டு அவள் அன்பைப்பெற அரும்பாடுபடுகிறான். மணிமேகலைக்கும் அவனிடத்தில் காதல் உண்டாகின்றது எனினும் அவளுடைய உள்ளமானது துறவொழுக்கத்தை நாடி நின்றது. உதயகுமரன் பால் அவள் வைத்த காதல் அவளை ஒரு புறம் இழுக்கத்துறவொழுக்கம் பூண்பதில் அவளுக்குண்டான வேணவா மற்றொரு புறம் இழுக்க இவையிரண்டிற்கும் இடையே கிடந்து ஊசலாடுகின்றது அவளுள்ளம். காலத்தின் போக்கிற்கு இணங்கக் காதல் தோற்றுப் போகத் துறவு வெற்றி பெறுமாறு சில இலக்கியங்கள் அமைகின்றன. இவை சங்க காலத்து இலக்கிய மன்று என்று வாதிட்ட போதும் ஒரு சில சான்றுகள் சங்க இலக்கிய காவியமாகக் கூறுகின்றன. தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய போதும் மதக் கொள்கைகளும் துறவொழுக்கங்களும் விருத்தி பெறவும் இவ்விலக்கியம் காதலில் மாத்திரம் அல்ல துறவிலும் சான்று பகர்கின்றது. இங்ஙனம் துறவொழுக்கங்களைப் பொருளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள நூல்கள் சிறந்த இலக்கிய வரிசையில் வைத்துப் பாராட்டப்படுவது தமிழ் மொழிக்குள்ள ஒரு தனிச் சிறப்பாகும்.

நற்றிணை குறுந்தொகை அகநாநூனூறு என்னும் நூல்களிலுள்ள செய்யுட்கள் அகவற்பாவாலானவை. ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு திணைப் பொருளைக் கூறுகின்றது. காத லொழுக்கங்களைக் கூறுகின்றனவெனினும் செய்யுட்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாலடி நானூறு என்னும் நூலிலுள்ள செய்யுட்கள் சிலவற்றிலும் பழமொழிகளும் பயன்படுகின்றன. மக்களின் பண்பாடு மன இயல்பு பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டில் வழங்கும் பழமொழிகள் பெரிதும் உதவுகின்றன. கலித்தொகை பரிபாடல் ஆகிய இரு நூல்களுட் சேர்க்கப்பட்டுள்ள செய்யுட்கள் பலவற்றின் மொழிநடை முதலியவற்றை நோக்குமிடத்து வடமொழிச் சொற்கள் சொற்றொடர்கள் வடமொழி நூல்களிற் காணப்படும் கதைக்குறிப்புகள் அறநெறிகள் முதலியன கலித்தொகை பரிபாடல் செய்யுட்களிலும் காணப்படுகின்றன. பத்துப்பாட்டிலுள்ள திருமுருகாற்றுப்படை என்பது குறிஞ்சி நிலத்துத் தெய்வமாய முருகனையும் வடமொழிப் புராணங்களிற் போற்றப்படும் சுப்பிரமணியக் கடவுளையும் ஒருவராகக் கொண்டு தமிழ் மக்கள் வழிபட்டனர். காதலையும் வீரத்தையும் சிறப்பாகப் பாராட்டிச் செய்யுள் செய்த சங்ககாலப் புலவர்கள் அகவற்பாவைப் பெரிதும் கையாண்டனர். அறநெறிகளையும் ஒழுக்க ஆசாரங்களையும் ஒட்டிய சில சான்றுகளும் தமிழில் காணப்படுகின்றன.

இவ்வாறு பலவற்றாலும் சங்க இலக்கியமும் வீரமும் காதலும் தமிழில் சங்க காலத்தில் சிறந்து விளங்கியதற்குச் சங்கப்புலவர்களின் அஞ்சா நெஞ்சமும் மனத்திண்மையும் தான் காரணம். அத்துடன் இயற்கைக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் கூர்ந்து அவதானித்து இலக்கியம் அமைத்தனர். என்று மிறவாத இன்பத் தமிழ்ப் பாக்களைத் திறம்படப் பாடி அரசர்களை மகிழ்வித்து அவர்களால் பாமாலை சூட்டப் பெற்றனர். வறுமையிற் கிடந்து வருந்தியபோதும் புகழுக்குரிய ஒருவனையன்றிப் பிறரைப் பாடாது உவகையொடு நீங்கினர். நாட்டினின் நலனையும் தமிழ் நாட்டில் ஒற்றுமையும் நிலவச் செய்து தமிழர் பண்பாட்டினை வளர்த்துத் தமிழ் மொழியைப் பரவச் செய்தனர். அத்துடன் பிறர் புகழ் பாடித் தம் புகழ்நாட்டிய பெருமை மிக்கோர் சங்கப்புலவர்கள். தமிழ்ச் சங்க இலக்கியத்துக்குத் தூணாக விளங்கிய சங்கப் புலவர்களால் தான் சங்க இலக்கியமும் தமிழும் பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்கின.



இதனால் மக்களுடைய ஒழுக்கங்களும் மனோபாவங்களும் இலக்கியத்துக்குப் பொருளாகக் கொண்டு செய்யுட் செய்தனர். அக்கால மக்களின் வாழ்க்கை பூக்களாலும் தழை கொடியாலும் தம்மை அலங்கரித்துக் கொண்டு காதலும் வீரமும் இயற்கையோடு போராடிய வாழ்க்கை தான் இலக்கிய வரலாறு ஆகும். அது மக்கள் வாழ்க்கையைப் பொருளாக அமைத்து அகத்திணை புறத்திணை என வகுத்து அமைத்து சங்க இலக்கியம் உருவானது. அகத்திணை யென்பது காதலொழுக்கம், புறத்திணையென்பது போரும் வீரமும் ஆகிய ஒழுக்கம். இவை காதலையும் வீரத்தையும் சிறப்பாகப் போற்றியுள்ளன அல்ல. அகத்திணை, புறத்திணை யென்பது ஒருவர் பெயரைச் சுட்டிக் கூறும் பாக்கள் புறத்திணையுள் அடங்கும். சுட்டியொருவர் பொன் கொள்ளாப் பாக்கள் அகத்திணையுள் அடங்கும். தமிழ்நாட்டை ஆண்ட அரசர்களின் வீரச் செயல் கொடைச்சிறப்பு ஆட்சித்திறன் முதலியவற்றையும் சங்கால மக்களுடைய அறலொழுக்கம் கலைச் சிறப்பு போர் முறைகள் முதலியவற்றையும் சங்கப்புலவர்களினது சிறப்புடைக் குணங்களையும் முடியுடை மன்னர்களின் சரித்திரங்களையும் இவை எடுத்தியம்புகின்றன. சங்க இலக்கியமான அகத்திணை புறத்திணை என்பது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தல் என ஐந்து வகையான இயற்கைப் பிரிவுகளையுடைய நிலத்தில் பண்டைக்காலத்தில் மக்கள் குழுவினைக் குறித்து நின்ற "திணை" என்னும் சொல் நாளடைவில் மக்கள் ஒழுக்கத்தைக் குறிப்பதாயிற்று. அதனால் புணர்தல் பிரிதல், இருத்தல், ஊடலெனும் எனும் ஐந்தும் தூய காதலொழுக்கங்களாக ஆக்கி அவர்கள் வழக்காகின. அவ்வந் நிலங்களுக்குரிய போரொழுக்கங்கள் மக்கள் போருக்குச் செல்லும் போது சூடிச் சென்ற வெட்சி, வஞ்சி முதலிய பூக்களாற் பெயர் பெறலாயின.

இவ்வாறு போரொழுக்கங்களோடு புறவொழுக்கங்களும் சங்க இலக்கியத்தில் உண்டு. போரிலே புண்பட்ட வீரனொருவன் அப்புண்ணை ஆற்றிக் கொண்டு வாழும் உலக வாழ்க்கை வேண்டாது அப்புண்ணைக் கிழித்துக் கொண்டு இறந்து போதல், போர் நிகழ்ந்த அன்றிரவில் அப்போர் களத்தே புண்பட்டுக் கிடந்த வீரனொருவனை நாய், நரி முதலியன நீண்டாவண்ணம் பிறர் அவனைக் காத்தல். அவன் மனைவி காவல் செய்தல் இவனொடு உடனுயிர் நீத்தல் உடன் கட்டை ஏறல் முதலிய புறவொழுக்கங்களும் சங்கச் செய்யுளில் காணப்படுகின்றன.

இவ்வாறு சங்ககால மக்களுடைய அறிவாக்கம், வாழக்கைச் சிறப்பு, போர் முறைகள் முதலியவற்றையும் சங்கத்துச் சான்றோரெனப் பாராட்டப்பட்ட அக்காலத்துப் புலவர்களிடைய சிறப்புடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களையும் இவ்செய்யுட்கள் எடுத்தியம்புகின்றன. அத்துடன் தமிழ் நாட்டை ஆண்ட அரசர்களின் வீரச்செயல்களையும் எடுத்தியம்புகின்றன. இவ்வாறு தமிழ்மொழி பரந்துபட்ட உலகியலறிவும் இயற்கையோடு ஒன்றித்து அவ்வியற்கை அனைத்தையும் சிறப்பித்துத் தமிழ் மக்களது அனைத்து நிகழ்ச்சிக்கும் தமிழ் மக்களது செவியுணர்விற் சேர்ந்த இசையினிமைக்கும் பொழுது வளமாகச் சங்க இலக்கியம் அமைத்துள்ளது. தமிழிற்கே தனியுரிமை யென முத்திரை பதிக்கப்பட்டவை.

இவ்வாறு இலக்கியப் பொருண்மையாலும் செய்யுள் மரபாலும் இலக்கியத் தொன்மையாலும் திராவிடமொழிக்குள்ளே தமிழ் மொழி சிறந்து விளங்கியது. தமிழ் மொழியின் இயற்கையில் அமைந்த தத்துவமொன்று ஆகும். சித்தத்துவத்தை தமிழின் தனிப் பண்பு என்று குறிப்பிடுவர். இப்பண்பு யாவர்க்கும் எளிதிற் புலப்படக்கூடியதாய்ப் பிறமொழிகளின் பண்புகளினின்று எளிதில் வேறு காணக்கூடியதாய்த் தெளிவாயுள்ளது. இயற்கைச் சக்திகளை வெல்ல வேண்டுமாயின் இயற்கைச் சக்திகளைக் கொண்டே வெல்லுல் வேண்டும். இயற்கை சக்திகளுக்கு அடக்கினாலன்றி இயற்கையைக் வெல்லுதல் இயலாது. இவ்வாறு தமிழின் தனிப்பண்பு சங்க இலக்கியத்தில் சிறந்து விளங்குகின்றது. மிகப்பூர்வ காலந்தொட்டு நம் தமிழ் நாடு வாணிகத்தில் மிகச் சிறந்த தொன்றாய் இருந்து வந்தது. யவனர் முதலிய அயல் நாட்டு வணிகர்கள் கூட்டுறவினால் தமிழ்மொழி நல்ல பயனையடைந்திருத்தல் வேண்டும். பிறமொழி மக்களால் தமிழ் அடைந்துள்ள வளத்தினை இட்டும் வணிக மூலமாக ஏற்பட்ட மொழி வளர்ச்சியும் சங்க தமிழ் இலக்கியம் வளர்ச்சியுறக் காரணமாகும்.

தமிழ் மொழியிலுள்ள ஆதியிலக்கியங்களாகிய எட்டுத்தொகை நூல்களோவெனின் தமிழிற்கே சிறந்துரியவாய் வடமொழியிலக்கண இலக்கியங்களிற் காணப்பெறாதவாயுள்ள இலக்கணம் அமைந்த செய்யுள்களால் இயன்றுள்ளன. அகவற்பா, கலிப்பா வெண்பா முதலியன தமிழிற்கே தனித்துரிய செய்யுள் வகைகளாலும். திராவிட வகுப்பிற் பிற மொழிகட்குரிய ஆதியிலக்கியங்கள் வடமொழி நூல்களில் வழிவந்தனவாம். எட்டுத்தொகை பத்துப்பாட்டும் என்னும் நூல்களிலே தொகுக்கப்பட்டவை சங்க இலக்கியச் செய்யுளாகும். இவை தமிழ் நாட்டை ஆண்ட அரசர்களின் வீரச் செயலினையும் கொடைச்சிறப்பினையும் சங்க மக்களுடைய வாழ்க்கைச் சிறப்பினையும் பண்பாடுகளையும் சங்கப்புலவர்களிடையே சிறப்புடைக்குணங்களையும் எட்டுத் தொகை பத்துப்பாட்டு எடுத்தியிம்புகின்றன. அவை செய்யுட்கள் யாவும் உள்ளன



உள்ளவாறே கூறும் இயல்பினையுடையவை. கருதிய பொருள் விரைவில் புலப்படுவதற்கு வேண்டிய சொற்களையமைத்து புலவர்கள் செய்யுட் செய்தமையால் அலையாவும் பொருட்டெளியும் சொற்செறிவுமுடையதலாக விளங்குகின்றன. இவை அக்காலத்தில் வாழ்ந்த முடியுடை வேந்தர், குறுநிலபன்னர், வள்ளல்கள் முதலானோரின் வீரக்குறிப்பினையும் அறநெறி வழுவா ஆட்சிகளையும் புனைந்து கூறுகின்றன. அத்துடன் மன்னர் முதலானோர் முன்னிலையில் நின்று அவர்களின் முகக்குறிப்பு, தோற்றப்பொழிவு முதலியவற்றை நேரிலே பார்த்துப் பாடினர். அவர்களில் பாடப்பெறுதல் பெரும்பேறாக கருதிய மன்னர் பரிசில்களை அள்ளி வழங்கியதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு செறிவுத் தெளிவும் பொருந்திய இவை உணர்ச்சிகளை, புலப்படுத்திக்கூடியவாறு துறை, வண்ணம், பதுர், பாட்டின் பெயர் என்பனகுறிக்கப்பட்டு இயற்றமுக்கு உரியனவாக அகவற்பா வஞ்சிப்பாவால் இயற்றப்பட்டவை. அத்துடன் அன்பினைந்திணைகளான மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை முறையே அக்காலத்தில் தலைவி தலைமகனது கொடுமையைப் பற்றித் தன் தோழிக்கு உரைத்தமை இவையும் அரசனை வாழ்த்தியும் தொகுக்கப்பட்ட இவைகள் சொற்சுவை பொருட்சுவையுடையனவாகத் திகழ்கின்றன. இசையோடு இடவும் பாடப்படும் பண்பினையுடைய சிறப்பினைக் கொண்டுள்ள இவை படிப்போர்க்குப் பெரிதும் இன்பந்தரவல்லன.

சங்கத்தமிழ் இவ்வாறு மொழிநடை, போக்கு, பொருளமைதி, அவை குறிக்கும் மரபு, பண்பாட்டு நிலை அவற்றின் கண் வந்துள்ள கதைக் குறிப்புக்கள் முதலியவற்றை நோக்கும் போது சங்க இலக்கியங்கள் தமிழ் மொழி, சிறப்பு முதலிடம் பெற்று விளங்குகின்றன.

சங்கப்புலவர்களை நோக்கும் போது மக்களிடத்தில் பேரன்பும் அரசரை அறநெறியில் செலுத்தும் அருமுயற்சியும் அஞ்சா நெஞ்சுடன் உண்மையை அடுத்தியம்பும் மனத்தின்மையுமுடைய சங்கப்புவலவர் தமிழ் நாட்டிலே ஒற்றுமையை நிலவச் செய்து தமிழர் பண்பாட்டினை வளர்த்து மன்னருக்கு உயிரையும் உவந்தளித்தலை என்றுபிறவாத இன்பத் தமிழ்ப் பாக்களைச் சிறப்பாகப் பாடி அந்தக் கருத்துக்களை இனியமொழி நடையில் தெளிவாகப் பாடிச் சங்ககாலத் தமிழகம் சிறப்புற்று விளங்கிற்று. ஒரு மொழியில் செய்யுளிலக்கியம் முதலில் தோன்ற அதனைத் தொடர்ந்து உரைநடை இலக்கியம் தோன்றியது. இவ்வாறு தமிழ் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியை நோக்கும் போது சங்ககலைத்துச் சமுதாயம் கற்பனையுலகிற் சஞ்சரித்தல் முதலிய சிறப்புடைய பண்புகளையுடையதாய் விளங்கியமையால் அச்சமுதாயத்தின் கண் பல சிறந்த புலவர்கள் தோன்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க கலைச் செய்யுட்களின் சொற்பொருட் போக்கிற்கும் பிற்காலச் செய்யுட்களின் போக்கிற்கும் பலவகையில் வேற்றுமை உண்டு. சங்ககாலத்திலிருந்த புலநெறி வழக்கு பெறின்வழக்கு முதலியவை பிற்காலத்தில் வழக்குகலிந்து போயின. சங்காலப் பழைய முறைகள் கைவிடப்படப் புதியமுறைகள் பிற்காலத்தில் தோன்றின. மக்களின் நடையுடை பாவனைகள் காலத்திற்குக் காலம் வேறுபடுவது போலவே செய்யுள் வழக்கு முதலியவையும் வேறுபடுதல் இயல்பாகும். அக்காலப்பகுதியிலே செய்யுள் மரபு சிறிது சிறிதாக மாற்றமுற்றுச் சென்றிருப்பதை நாம் அக்காலச் செய்யுட்களிற் காணலாம். ஐவகை நிலங்களிற் பாலை நிலம் வரண்ட பிரதேசமாதலாலும் அந்நிலத்தில் வாழ்ந்த மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அங்கு பெறமுடியாமையால் அந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் குறிஞ்சி முதலிய ஏனைய நிலங்களிற் சென்று வாழ நேர்ந்தது அவ்வாறு பிரிதல், உடன்போக்கு என்னும் பாலை யொழுக்கங்கள் குறிஞ்சி முதலிய ஏனைய நிலங்களுக்கு உரியனவாயின. இவ்வாறு மக்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

பண்டைக்கலைத் தொட்டு இவ்வாறு தமிழ்மொழி சிறந்த இருப்பிடமாகத் திகழ்கின்றது. சங்க காலத்தில் தமிழ்மொழியை வளர்த்தவர்களில் ஈழத்துப் பூதந்தேவனாரும் ஒரு புகழ் பெற்ற புலவராவர். தமிழ்மொழி பல துறைகளிலும் உயர்வு நிலையில் காணப்பட்டது. அரசர் தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவரையும் மிகவும் மதித்து வந்தனர். இவ்வாறு ஈழநாட்டிலும் தமிழ் வளர்ச்சி கண்டது. ஈழத்துப்புலவர்கள் வரிசையில் ஈழத்துப்பூதத்தேவனார், ஈழநாட்டிலும் தமிழ் மொழி சங்ககாலத்தில் சிறப்புற்று ஓங்கக் காரணமானவர்கள். ஈழநாட்டிலிருந்து சங்க காலத்தில் புலவர்கள் தமிழகம் சென்று தமிழ்மொழியை வளர்த்துப் புகழ்பெற்றனர். ஈழநாட்டிலே தமிழ்மொழி வளர்ச்சி குன்றவில்லை. இயற்கைப் புலமைத்திறமையும் வர்ணனைச் சிறப்பையும் புத்திசாதுரியத்தையும் கொண்ட சங்க இலக்கியங்கள் தோன்றத் தமிழ் மொழி புகழ்பெற்று விளங்கச் சங்க காலத்தில் தமிழகத்தொடு ஈழநாடும் உதவியது என்பது பெருமைகுரியது.

**ஜெசிக்கா தவஞானம்**



## இம்மூன்று ஆக்கங்களும்

**ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் 2004ஆம்ஆண்டு நடத்திய உயர் இலக்கியத் தேர்வுகளில் பரிசில் பெற்றவை**

(அ) **ஆய்வுக் கட்டுரைத் தேர்வு. பொருள். தமிழும் சங்க இலக்கியங்களும்**
ஜெசிக்கா தவஞானம். 10 A. கோவில் வீதி
யோசேவ் வாஸ் மாவத்தை. புத்தளம்

(ஆ) **இலக்கிய நாடக ஆக்கத்தேர்வு**
**நாடகம்:- "பூண்க நின் தேரே"**
திருமதி ஜெ.கந்தவேள்
ஆடியபாதம் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

(இ) **சிறுபிரபந்த ஆக்கத்தேர்வு**
**'ஈழத்துப் பூதந்தேவனார் நான் மணிமாலை**
ஆ.இக்பால். றிபாயா மன்சில்.
தர்க்கா நகர்.

இவர்களுக்கும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நினைவுப் பரிசில் ஆயிரம் ரூபாவும். கழகச் சான்றிதழும் 21.11.2004 ஆம் நாள் கொழும்பில் நடைபெற்ற தொல்காப்பிய மகாநாட்டில் வழங்கப் பெற்றன.

**தமிழவேள் இ.க.கந்தசுவாமி**
**கழகச் செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ் ஆக்கங்களை ஆக்கியவர்கள்

'ஈழத்துப் பூதந்தேவனார் நான்மணிமாலை' என்னும் நூலை எழுதியவர் ஏ.இக்பால் என்னும் அறிஞர். இவர் இந்நாட்டில் சிறந்த கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். இவர் தென்னிலங்கையில் தமிழை வளம்படுத்திய அறிஞர்கள் வாழும் புகழ் பெற்ற வேருவளைப் பிரதேசத்தவர். வெண்பா, கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், அகற்பா என்னும் நால்வகைப் பாக்களால் அமைந்ததால் நான்மணி மாலை எனப் பெயர் பெறுகிறது. இந்நூலை இவர் அந்தாதித் தொகையில் அமைந்துள்ளமை ஒரு சிறப்பு ஆகும். ஈழத்தில் வெளிவரும் நான்மணிமாலை இது ஆகும். இவரது அறிவாற்றல் காரணமாக இலங்கை அரசு இவருக்குக் கலாபூசணம் என்னும் சிறப்பு விருது வழங்கியது. இந்நாட்டில் தமிழ் வளம் பெறவும் நிலை பெறவும் இவர் இந்நூலில் அரிய அறிவுரைகளை அறிவுறுத்தியுள்ளார்.

"பூண்க நின் தேரே" என்னும் இலக்கிய நாடகத்தை எழுதியவர் திருமதி ஜே.கந்தவேள் ஆவர். இவர் பல்கலைக்கழகப் பட்டதாரி ஆசிரியையாகத் தொழில்புரிபவர். இவர் இவ் இலக்கிய நாடகத்தைச் சங்ககால இலக்கியப் பின்னணியில் எழுதியுள்ளார். இவர் ஆழ்ந்தகன்ற இலக்கிய அறிவும் எழுத்தாற்றலும் உள்ளவர். நிகழ்வுகளைத் தொடர்புறுத்திச் செல்லும் பாங்கு பாராட்டத்தக்கது. உள்ளத்தைக் கவரும் வகையில் சொற்சுவை பொருட்சுவை உள்ளதாக இதனை எழுதியுள்ளார். இது போலப் பயன்தரு இலக்கிய நாடகங்களை எழுதித் தமிழுலகுக்கு வழங்குதல் வேண்டும்.

"தமிழும் சங்க இலக்கியங்களும் என்னும் ஆய்வுக் கட்டுரையை எழுதியவர் செல்வி ஜெசிக்கா தவஞானம், பண்டைப் பெருமை உள்ள புத்தளம் பிரதேசத்தவர். தமிழ்ப்பற்றும் ஆர்வமும் இலக்கிய அறிவும் உள்ளவர். சங்ககால இலக்கியங்களைத் தெளிவாக ஆராய்ந்து பயன்தரு வகையில் எழுதியுள்ளார். எழுத்தாற்றல் உள்ள பல கட்டுரை எழுதியுள்ளார். இவற்றுட் சில பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ளன.

பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழகப் பரிசில் பெற்றவர்கள் இந்நாட்டில் தமிழ்வளம் பெற்ற வெவ்வேறு பிரதேசத்தவர்கள். தமிழை வளர்த்த வெவ்வேறு மதத்தவர்கள். இவர்களுக்குப் பரிசில் வழங்கியவர் இந்நாட்டில் தமிழ் வளம் பெற்ற இன்னொரு பிரதேசத்தவர். இவ்வாறு அமைந்தமை இப்புலவர் கழகத்திற்குப் பேருவகைத் தருகிறது இவை இறையருளால் அமைந்தன.

**தமிழவேள் இ.க.கந்தசுவாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org